# 2017

## වාර්ෂික වාර්තාව

## ஆண்டு அறிக்கை

## ANNUAL REPORT

**ශ්‍රී ලංකා රාජ්‍ය ඖෂධ නීතිගත සංස්ථාව**

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

State Pharmaceuticals Corporation of Sri Lanka

# ஆண்டறிக்கை

# 2017

ஆரோக்கியமான ஒரு தேசத்தை அபிவிருத்தி செய்வதில் முதன்மைப் பங்காளியாதல்

# உள்ளடக்கம்


- எமது நோக்கு, பணி, இலக்குகள் மற்றும் சுலோகம் 01
- நிதி முனையம்சங்கள் 02
- பணிப்பாளர் சபை மற்றும் கூட்டாண்மைத் தகவல் 05
- முகாமைத்துவக் குழு 06
- தலைவரின் செய்தி 09
- முகாமைத்துவப் பணிப்பாளரின் அறிக்கை 10
- பணப்பாளர்களின் அறிக்கை 12
- கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 14
- நிதிநிலைக் கூற்று 15
- உரிமைப் பங்கில் மாற்றங்கள் பற்றிய கூற்று 16
- விபரமான வருமானக் கூற்று 17
- ஒசுசல தொழிற்பாடுகளின் வருமானக் கூற்று 18
- காசுப் பாய்ச்சல் கூற்று 21
- கணக்கீட்டுக் கொள்கைகள் 22
- கணக்குகளுக்கான குறிப்புகள் 52
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 56
- க.த.அ.வின் கூற்று மீதான தலைவரின் கருத்துரைகள் 76
- மனிதவளப் பகுப்பாய்வு 84
- பத்து ஆண்டுச் சுருக்கம் - வருமானக் கூற்று 85
- பத்து ஆண்டுச் சுருக்கம் - நிதிநிலைக் கூற்று 86
- விற்பனை வலையமைப்பு 87

## எமது நோக்கு

**உங்கள் ஆரோக்கியமே எமது நோக்கம்**

## எமது பணி

இனப் பொதுவியல்பான மருந்துகளைப் பயன்படுத்துதலை ஊக்குவிக்கின்ற அதேவேளை, பாதுகாப்பானதும் பயனுறுதியானதும் உயர் தரம் உள்ளதுமான மருந்துப் பொருட்களையும் ஆரோக்கியச் சேவைகளையும் செலவு தாங்கக்கூடிய விலைகளில் வழங்குவதன் மூலம் இலங்கையின் பொதுமக்களுக்குச் சேவையாற்றுகின்ற முன்னணி வகிக்கும் ஆரோக்கிய நல நிறுவனமாகத் திகழ்தல்

## எமது இலக்குகள்

மக்களுக்கான சேவைகள் முதன்மையானவை
தரமும் பாதுகாப்பும்
நாணயத்தை ஒருபோதும் விட்டுக்கொடுப்பதில்லை
நம்பகமான பங்காளியும் செயல்விளைவுள்ள அணி ஆட்டக்காரரும்
உன்னத செயலாற்றத்துக்கான பேரார்வம்
புத்தாக்கமே உயிர் நாடி

## எமது சுலோகம்

உங்கள் ஆரோக்கியமே எமது சுலோகம்

# இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

## நிதி முனையம்சங்கள்

| விபரம் | 2017<br>ரூபா: ' 000 ' | 2016<br>ரூபா: ' 000 ' | வேறுபாடு<br>(%) | 2015<br>ரூபா: ' 000 ' |
|---|---|---|---|---|
| வருவாய் - SPC | 6,593,401 | 6,127,478 | 7.6 | 5,286,876 |
| DHS இற்கு வழங்கல் | 25,970,290 | 26,127,912 | (0.6) | 19,176,807 |
| **மொத்த வருவாய்** | **32,563,691** | **32,255,390** | 1.0 | **24,463,683** |
| மொத்த வர்த்தக இலாபம் SPC | 1,680,368 | 1,656,938 | 1.4 | 1,410,722 |
| மொத்த மிகை DHS | 1,887,026 | 1,850,649 | 2.0 | 1,386,731 |
| **மொத்த மிகை** | **3,567,394** | **3,507,587** | 1.7 | **2,797,453** |
| பிற வருமானம் | 53,004 | 43,084 | 23.0 | 51,259 |
| நிர்வாகச் செலவுகள் | (1,288,184) | (1,101,435) | (17.0) | (1,057,970) |
| பிற தொழிற்பாட்டுச் செலவுகள் | (741,459) | (580,844) | (27.7) | (563,357) |
| நிதிக் கிரயம் | (1,295) | (1,071) | (20.9) | (1,600) |
| மேலதிகப்பற்று வட்டி | (35,199) | (5,434) | (547.8) | (734) |
| நிதி வருமானம் | 5,765 | 5,721 | 0.8 | 5,086 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | **1,560,026** | **1,867,608** | (16.5) | **1,230,137** |
| வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் | (59,575) | 10,049 | (692.8) | 239,887 |
| வரிவதிப்பு | (470,595) | (625,864) | 24.8 | (610,539) |
| **மொத்த விரிவான வருமானம்** | **1,029,856** | **1,251,793** | (17.7) | **859,485** |
| **திறை.தீர்வை/செலுத்திய பங்கிலாபம்** | **(222,000)** | **(216,000)** | (2.8) | **(100,000)** |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 6,792,893 | 5,985,037 | 19.2 | 5,022,870 |
| பங்களித்த மூலதனமும், ஒதுக்கமும் | 125,117 | 125,117 | - | 125,117 |
| நடைமுறையல்லாத சொத்துகள் | 2,179,335 | 2,166,630 | 0.5 | 2,156,615 |
| நடைமுறைச் சொத்துகள் | 10,699,807 | 7,353,933 | 45.5 | 7,027,468 |
| நடைமுறையல்லாத பொறுப்புகள் | 264,651 | 192,212 | (37.7) | 233,394 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 5,696,481 | 3,218,196 | (77.0) | 3,802,703 |
| தேறிய நடைமுறைச் சொத்துகள் | 5,003,326 | 4,135,737 | 28.2 | 3,224,765 |
| **விகிதங்கள்** | | | | |
| மொத்த இலாப வீதம் (%) SPC | 25.5 | 27.0 | | 26.7 |
| மொத்த இலாப வீதம் (%) DHS | 7.3 | 7.1 | | 7.2 |
| விற்பனைகளுக்கான மொத்த மிகை (%) | 11.0 | 10.9 | | 11.4 |
| ஈடுபடுத்திய மூலதனம் மீது வருவாய் (%) | 22.2 | 29.7 | | 22.9 |
| வட்டிக் காப்பு (மடங்கு) | 45.32 | 344.69 | | 1,677 |
| மொத்த சொத்துகளுக்கு உரிமைப்பங்கு (மடங்கு) | 1:1.5 | 1:1.5 | | 1:1.7 |
| ஈடுபடுத்திய மூலத்துக்கான புரள்வு (மடங்கு) | 4.53:1 | 5.12:1 | | 4.55:1 |
| நடைமுறை விகிதம் (மடங்கு) | 1:1.8 | 1:2.29 | | 1:1.85 |
| திரவத்தன்மை விகிதம் (மடங்கு) | 1:1.56 | 1:1.66 | | 1:1.23 |
| இருப்பு புரள்வு வீதம் - - SPC (மடங்கு) | 2.04 | 2.04 | | 2.07 |
| **ஏனைய தகவல்கள்** | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 909 | 889 | | 862 |
| ஊழியர் ஒருவருக்கான வருமானம் (ரூபா) | 1,716 | 2,101 | | 1,427 |
| ஊழியர் ஒருவருக்கான விற்பனை (ரூபா) | 35,824 | 36,283 | | 28,380 |

# இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
# பணிப்பாளர் சபை

**திரு. சரத் லியனகே - தலைவர்**

சட்டத்துறையில் 32 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்ட ஒரு சட்டத்தரணியும் சத்தியப்பிரமாணங்களுக்கான ஆணையாளருமான இவர் உயர் நீதிமன்றம் வரையான எல்லா நீதிமன்றங்களிலும் தோற்றியுள்ளார். ஜெனரல் கொப்பேகடுவ மற்றும் ஜெனரல் விமலரத்ன ஆகியோர் கொல்லப்பட்ட ஊர்காவல்துறை குண்டுவெடிப்பைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முழுவதிலும் தோற்றினார். இலண்டன் பொதுநலவாய மண்டபத்தில் தனது அமர்வுகளை நடத்திய இரண்டு பிரதம நீதியரசர்கள் மற்றும் ஒரு "நைற்" (knight) ஆகியோரை உள்ளடக்கிய சர்வதேச ஆணைக்குழு முவழுவதிலும் இவர் தோற்றினார். அரச நிறுவனங்களில் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் தலைவராகவும் சேவையாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ளார். முதன்மையான கம்பனிகள் குழுமத்தின் (சட்ட) ஆலோசகரும் ஒரு கம்பனியின் பணிப்பாளரும் ஆவார். இலங்கையில் அரசியல் சாராத வறிய மக்களுக்கான P.M.E நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைவரான அவர் இலங்கையில் உள்ள வறிய மக்களுக்காக சேவையாற்றி உள்ளதுடன் தொடர்ந்தும் அந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார். அவர் 2015ஆம் ஆண்டிலிருந்து அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக சேவையாற்றுகின்றார்.

**டாக்டர் எம்.எம்.எம். றூமி - முகாமைத்துவப் பணிப்பாளர்**

டாக்டர் றூமி கலாநிதிப் பட்டத்தையும் உக்ரேன் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் விஞ்ஞானங்களில், குறிப்பாக கணனிகள், கணனி முறைமைகள் மற்றும் வலையமைப்புகளில் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். டாக்டர் றூமி உக்ரேன் தேசிய தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தில் கனிஷ்ட விரிவுரையாளராக நியமிக்கப்பட்டதுடன் தர்கா டவுண் (இலங்கை) அலிப் சர்வதேச பாடசாலையில் ஒரு பணிப்பாளராக தன்னார்வ சேவையையும் நல்கி வருகின்றார்.

பதினொரு வருடங்களுக்கும் அதிகமான முகாமைத்துவ அனுபவத்தைக் கொண்டுள்ள டாக்டர் றூமி, "சிலோன் ரீ லேண்ட் (பிறை) லிமிரெட்", "றோயல் பெக்கேஜிங் சொலூ'ன்ஸ் (பிறை) லிமிரெட்", "றென்ட் செரமிக்ஸ் (பிறை) லிமிரெட்", "கொன்றோனிக்ஸ் லங்கா (பிறை) லிமிரெட்" ஆகியவற்றின் தலைவராகவும் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் உள்ளார். அவர் வியாபாரத் துறையில் மிகுந்த அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் இலங்கைத் தேயிலைச் சபை மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட 50இற்கும் மேற்பட்ட கண்காட்சிகளில் இலங்கைத் தேயிலையின் விற்பனை ஊக்குவிப்புக்காக "சிலோன் ரீ லேண்ட் பிறைவேற் லிமிரெட"சார்பாக பங்குபற்றியுள்ளார். அவர் 2015ஆம் ஆண்டில் இருந்து இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக சேவையாற்றுகின்றார்.

**திரு. முக்தார் மரிக்கார்**

திரு முக்தார் மரிக்கார் தொழில் ரீதியாக ஒரு பொறியியலாளர் ஆவார். ஐக்கிய இராச்சிய சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் தோழமை உறுப்பினரான அவர் இலங்கை வர்த்தக சம்மேளனம், குளிரூட்டல் சேவை பொறியியல் சங்கம், "கூட்டிணைக்கப்பட்ட அமெரிக்கன் சொசைட்டி ஒப் ஹீற்றிங் ரெப்ரிஜெரேற்றிங் அன் எயா கண்டி'னிங் இன்ஜினியர்ஸ்" ஆகியவற்றை உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் தொழில்சார் உறுப்புரிமையையும் வணிகப் பேரவை உறுப்பாண்மையையும் கொண்டுள்ளார். திரு முக்தார் மரிக்கார் 2015 மார்ச் மாதம் முதல் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் ஒரு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். புறொஸ்டெயார் கம்பனிகள் குழுமத்தின் தாபகத் தலைவரான அவர் 1980ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அந்தப் பதவியை வகித்து வருகின்றார். அத்துடன் அவர் "புறொஸ்டெயார் பெனல்ஸ் (பிறை) லிமிரெட்", "மல்வான ஸ்பிறிங்ஸ் (பிறை) லிமிரெட்", பிராந்திய அபிவிருத்தி வங்கி மற்றும் "பான் ஏசியா பேங்கிங் கோப்பரே'ன் லிமிரெட்" ஆகியவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினருமாவார். அத்துடன் அவர் பல தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை உள்ளிட்ட அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் பணிப்பாளர் சபைகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் உறுப்பினராக சேவையாற்றியுள்ளார்.

திரு முக்தார் 2001ஆம் ஆண்டு முதல் ரியூனீசியக் குடியரசுக்கான இலங்கையின் கௌரவ தூதுவரும் (Hon. Consul General) ஆவார்.

**டாக்டர் பீ.ஜி.என். ரத்னசேன**

டாக்டர் பீ.ஜி.என். ரத்னசேன அறுவைச் சிகிச்சை ஆலோசக வைத்தியராவார். அவர் கு.சு.ஊ.ளு இங்கிலாந்து, ஆளு அறுவைச் சிகிச்சை மற்றும் M.B.B.S (சிலோன்) ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். அவர் இங்கிலாந்து அறுவைச் சிகிச்சையாளர் றோயல் கல்லூரியின் தோழமை உறுப்பினர், பொது அறுவைச்சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் முன்னாளர் தலைவர், மருத்துவ விசேட நிபுணர்கள் சங்கத்தின் தலைவர், ஆகிய பதவிகளை வகித்துள்ளார் அவர் பொது அறுவைச் சிகிச்சை ஆய்வுச் சபையின் குழு உறுப்பினராகவும் 2017 மார்ச் வரை PGMN இன் கல்விசார் அங்கீகார கல்வி மற்றும் ஒழுக்காற்றுக் குழுவின் உறுப்பினராகவும் ஆசுயு இன் குழு உறுப்பினராகவும் இருக்கின்றார். டாக்டர் பீ.ஜி.என் ரத்னசேன அவர்களுக்கு உன்னத ஆராய்ச்சியை மேற்கொண்டமைக்காக ஜனாதிபதி ஆராய்ச்சி விருது வழங்கப்பட்டது.

**திரு. புஷ்பகுமார த சொய்சா**

திரு. புஷ்பகுமார த சொய்சா 1988 ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டுவரை 14 வருடங்கள் தென் மாகாண சபையின் உறுப்பினராக இருந்தார். அவர் வணிக முகாமைத்துவம் (ICBT) மற்றும் மனித வளங்கள் முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளார். திரு. புஷ்பகுமார த சொய்சா "சௌத் கேற் கொலிஜ் இண்டர்நெஷனல்" நிறுவனத்தின் தலைவரும் "அகுரல ரீப் காடன் ஹோட்டல்" முகாமைத்துவப் பணிப்பாளரும் ஆவார். அத்துடன் அவர் வரையறுக்கப்பட்ட மத்துகம பிளாண்டே'ன் கம்பனியின் பணிப்பாளர் சபை உறுப்பினரும் ஆவார். அவர் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

**திரு. ஆனந்த கித்சிறி செனவிரத்ன**

திரு. ஆனந்த கித்சிறி செனவிரத்ன இலங்கை நிர்வாக சேவை (SLAS) விசேட தர அலுவலராவார். 2018 ஜனவரி முதல் திரு. செனவிரத்ன இலங்கை நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகமாக செயலாற்றிக்கொண்டிருக்கின்றார்.

திரு. செனவிரத்ன களனி பல்கலைக் கழகத்திலிருந்து இரசாயனவியலில் விசேட இளமாணி கௌரவ பட்டத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் அவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் வணிக மற்றும் நிதி நிர்வாகத்தில் பட்டப் பின் டிப்ளோமா பட்டத்தையும் கொழும்பு பல்கலைக் கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

அவர் இலங்கை நிர்வாக சேவையில் 1996 இல் இணைந்து கொண்டார். சேவைக்கால பயிற்சி ஆண்டை அவர் பூர்த்தி செய்ததும் 1996 ஆம் ஆண்டில் நிதி அமைச்சின் நிதிக் கொள்கைத் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 2006 ஆம் ஆண்டில் அதே அமைச்சில் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 2015இல் அவர் நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். அவர் 2018ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாக கடமையைப் பொறுப்பேற்கும் வரை அங்கு பணியாற்றினார்.

தற்போது அவர் தேசிய சேமிப்பு வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட டி லா ரூ லங்கா நாணய மற்றும் பாதுகாப்பு அச்சக தனியார் ஆகியவற்றில் பணிப்பாளர் சபை உறுப்பினராக சேவை புரிகின்றார்.

**திரு. சரத் அமுனுகம**

திரு. சரத் அமுனுகம சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சில் (பொது சுகாதார சேவைகள்) பதில் மேலதிக செயலாளராக இருக்கின்றார். அவர் 2017ஆம் ஆண்டில் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் ஒரு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

# இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
# கூட்டாண்மைத் தகவல்

**பணிப்பாளர் சபை**

| | | |
|---|---|---|
| திரு. சரத் லியனகே | தலைவர் | |
| டாக்டர் எம்.எச்.எம். றூமி | முகாமைத்துவப் பணிப்பாளர் | |
| டாக்டர் ஆர்.எம்.எல்.ஆர். சியம்பலாகொட | பணிப்பாளர் | (2017.08.24 வரை) |
| திரு. முக்தார் மரிக்கார் | பணிப்பாளர் | |
| டாக்டர் பீ.ஜீ.என். ரத்னசேன | பணிப்பாளர் | |
| திரு. புஷ்பகுமார த சொய்சா | பணிப்பாளர் | |
| திரு. கமகே சரத் குமார | பணிப்பாளர் | (2017.05.25 வரை) |
| டாக்டர் சரத் அமுனுகம | பணிப்பாளர் | (2017.08.24 முதல்) |
| திரு. ஏ.கே. செனவிரத்ன | பணிப்பாளர் | (2017.08.03 முதல்) |

**கணக்காய்வுக் குழு**

| | | |
|---|---|---|
| திரு. ஏ.கே. செனவிரத்ன | தலைவர் | (2017.08.03 முதல்) |
| திரு. கமகே சரத் குமார | தலைவர் | (2017.05.25 வரை) |
| டாக்டர் சரத் அமுனுகம | பணிப்பாளர் | (2017.08.24 முதல்) |
| டாக்டர் ஆர்.எம்.எல்.ஆர். சியம்பலாகொட | பணிப்பாளர் | (2017.08.24 வரை) |
| திரு. முக்தார் மரிக்கார் | பணிப்பாளர் | |
| டாக்டர் பீ.ஜீ.என். ரத்னசேன | பணிப்பாளர் | |

**கணக்காய்வாளர்கள்**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்ல

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி
தொகுதிக் கிளை, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01

**மக்கள் வங்கி**
சர்வதேசப் பிரிவு, தபால் பெட்டி இல. 437, ANCL கட்டிடம், டீ.ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10

**ஸ்டான்டட் சாட்டட் வங்கி**
தபால் பெட்டி இல. 112, 37, யோர்க் வீதி, கொழும்பு 01

**கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் லிமிடெட்**
நகர அலுவலகம், 98, யோர்க் வீதி, கொழும்பு 01

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்**
இல. 75, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 01

**கூட்டிணைக்கப்பட்ட திகதி**
செப்டெம்பர் 22, 1971

# இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
# முகாமைத்துவக் குழு

**திரு. கே.எம்.ஆர்.டீ.ஆர். தசநாயக்க - பொது முகாமையாளர்**

திரு. தினுஷி தசநாயக்க ஒரு முகாமைத்துவப் பயிலுனராக 1999.12.01ஆம் திகதி அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து தற்போது 2009.06.01 முதல் பொது முகாமையாளர் பதவியை வகிக்கின்றார். அவர் பொது முகாமையாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் கூட்டுத்தாபனத்தின் மனித வளம், நிர்வாகம், சட்ட மற்றும் வணிகப் பிரிவுகளில் சேவையாற்றி அந்தத் திணைக்களங்களில் பிரதிப் பொது முகாமையாளர் பதவிகளை வகித்தார். அவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் சர்வதேச வணிகத்தில் வர்த்தக இளமாணி (விசேடம்) பட்டத்தைப் பெற்றவராவார். அவர் ஜப்பானிய நகோயா பல்கலைக்கழகத்தில் சர்வதேச ஒத்துழைப்பின் சர்வதேச வணிக சட்டத்தில் விசேட பட்டம் பெற்றுள்ளார். அவர் ஒரு சட்டத்தரணியாவார். அத்துடன் அவர் இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கற்கைகள் நிறுவகத்தில் சர்வதேச வணிக சட்டத்தில் அற்றோனி பின் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் அவர் அங்கீகரிக்கப்பட்ட வணிக மத்தியஸ்தரும் ஆவார்.

**திருமதி டபிள்யூ.ஏ.எஸ்.டி.கே. பெரேரா - பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)**

1984 ஆம் ஆண்டு அ.ம.கூட்டுத்தாபனத்தில் இணைந்துகொண்ட திருமதி. டபிள்யூ.ஏ.எஸ்.டி.கே. பெரேரா, 2004.11.01 முதல் 2006.06.01 வரை சந்தைப்படுத்தல் பிரிவில் பிரதிப் பொது முகாமையாளராகவும் 2006.06.01 முதல் 2014.08.01 வரை தொழில்நுட்பம், ஆய்வுகூடம் மற்றும் உற்பத்திப் பிரிவில் பிரதிப் பொது முகாமையாளராகவும் பதவி வகித்து தற்போது 2014.08.01 முதல் சந்தைப்படுத்தல் பிரிவில் பிரதிப் பொது முகாமையாளராகப் பதவி வகிக்கின்றார். அவர் விஞ்ஞான இளமாணி (பௌதீக விஞ்ஞானம்) பட்டம், முகாமைத்துவத்தில் டிப்ளோமா, வணிக முகாமைத்துவத்தில் டிப்ளோமா மற்றும் வணிக நிர்வாகத்தில் முதுமாணி ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். அவர் ஒரு பதிவு செய்யப்பட்ட மருந்தகவியலாளரும் ஆவார்.

**திருமதி பி.கே.எஸ்.எஸ். குலசூரிய - பிரதிப் பொது முகாமையாளர் (கொள்வனவு மற்றும் இறக்குமதிகள் - மருந்தகப் பொருட்கள்)**

1997ஆம் ஆண்டு முகாமைத்துவப் பயிலுனராக அ.ம.கூட்டுத்தாபனத்தில் சேர்ந்து கொண்ட திருமதி பி.கே.எஸ்.எஸ். குலசூரிய 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இருந்து பதில் பிரதிப் பொது முகாமையாளர் (கொள்வனவு மற்றும் இறக்குமதிகள்) பதவியை வகிக்கின்றார். அவர் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் இருந்து உயிரியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி பட்டத்தையும் வணிக நிர்வாகத்தில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன் அவர் வழங்கல்கள் மற்றும் சாதனங்கள் நிறுவகத்தில் கொள்வனவு மற்றும் சாதன முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். அவர் வழங்கல் மற்றும் சாதனங்கள் முகாமைத்துவ நிறுவகத்தின் துணைநிலை உறுப்பினருமாவார்.

**திருமதி பிரியந்தி தசநாயக்க - பதில் பிரதிப் பொது முகாமையாளர் (கொள்வனவு மற்றும் இறக்குமதிகள் - சத்திரசி கிச்சை)**

1987ஆம் ஆண்டு முகாமைத்துவப் பயிலுனராக அ.ம.கூட்டுத்தாபனத்தில் சேர்ந்து கொண்ட திருமதி பிரியந்தி தசநாயக்க 2015 ஜூலை முதல் பதில் பிரதிப் பொது முகாமையாளர் (கொள்வனவு மற்றும் இறக்குமதிகள்) பதவி வகிக்கின்றார். அவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் வணிக நிர்வாகத்தில் விஞ்ஞான இளமாணி பட்டத்தையும் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் வணிகக் கற்கைகளில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன் அவர் வழங்கல்கள் மற்றும் சாதனங்கள் நிறுவகத்தில் கொள்வனவு மற்றும் சாதன முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். அவர் வழங்கல் மற்றும் சாதனங்கள் முகாமைத்துவ நிறுவகத்தின் துணைநிலை உறுப்பினருமாவார்.

## முகாமைத்துவக் குழு

**சாமரி கமகே - பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்நுட்பம், ஆய்வுகூடம் மற்றும் உற்பத்தி)**

திருமதி கே.ஜி.சி. சாந்திமாலா 1986 மே 15ஆம் திகதி ஒரு முகாமைத்துவப் பயிலுனராக அ.ம. கூட்டுத்தாபனத்தில் இணைந்து தற்போது 2017 ஒக்டோபர் 2ஆம் திகதி முதல் பதில் பிரதி முகாமையாளர் - தொழில்நுட்பம், ஆய்வுகூடம் மற்றும் உற்பத்தி பதவியை வகிக்கின்றார். அவர் களனி பல்கலைக் கழகத்திலிருந்து இரசாயனவியலில் விஞ்ஞான இளமாணி பட்டத்தையும் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் இருந்து வணிக நிர்வாகத்தில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் ஒரு பதிவுசெய்யப்பட்ட மருந்தகவியலாளர் ஆவார்.

**ஹிரண்யா சம்மந்தப்பெரும - பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)**

திருமதிக ஹிரண்யா சம்மந்தப் பெரும 2007 ஜூலை 01ஆம் திகதி முகாமைத்துவக் கணக்காளராக அ.ம. கூட்டுத்தாபனத்தில் இணைந்தார். அவர் நிதி முகாமைத்துவம், முகாமைத்துவக் கணக்கீடு மற்றும் கணக்காய்வில் 20 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (ICASL) மற்றும் இலங்கை சான்றிதழ் பெற்ற முகாமைத்துவக் கணக்காளர்கள் (CMA) நிறுவகம் ஆகியவற்றின் துணைநிலை உறுப்பினராக இருப்பதுடன் பட்டய சான்றிதழ் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் (ACCA- UK) உறுப்புரிமையை எதிர்பார்த்துள்ளார்.

இவர் 2001இல் கொழும்பு பல்கலைக் கழகத்தில் இருந்து நிதித்துறையில் விசேட நிபுணத்துவம் பெற்று வணிக நிர்வாகத்தில் இளமாணி கௌரவ பட்டத்தைப் பெற்றுள்ளார். அவர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் இருந்து **MBA** பட்டத்தைப் பெற்றுள்ளார்.

**புஷ்பா ஜெனற் - பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்)**

திருமதி எம்.டபிள்யூ.பி. ஜெனற் 1987இல் அ.ம. கூட்டுத்தானத்தில் இணைந்து தற்போது 2017.08.15ஆம் திகதி முதல் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) பதவியை வகிக்கின்றார். அவர் பி.பொ. முகாமையாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் 2015 முதல் 2017 வரை நிர்வாக முகாமையாளராகவும் 2001 முதல் 2011 வரை மனித வளங்கள் திணைக்களத்தில் உதவி முகாமையாளராகவும் சேவை புரிந்துள்ளார். அவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் இருந்து வணிக இளமாணி (விசேடம்) பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (இடைநிலை மட்டம்) தகைமையையும் பெற்றுள்ளார்.

## இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
## முகாமைத்துவக் குழு - சிரேஷ்ட முகாமைத்துவம்

| | |
|---|---|
| திருமதி எஸ்.எம்.ஏ.டி.எஸ்.எச். சம்மந்தப்பெரும | முகாமைத்துவக் கணக்காளர் |
| திரு. லொக்குசூரிய | உள்ளகக் கணக்காய்வாளர் |
| திருமதி பி.டி. குணசேகர | கணக்காளர் - கொடுப்பனவுகள் |
| திருமதி கே.ஜி.சி. சாந்திமாலா | முகாமையாளர் - தொழில்நுட்பம் |
| திருமதி. பி.கே. விஜேரத்ன | முகாமையாளர், தர உத்தரவாத ஆய்வுகூடம் |
| திரு. டபிள்யு.ஏ.எஸ் விக்கிரமாரச்சி | முகாமையாளர் - ஆராய்ச்சி மற்றும் புதிய கருத்திட்டம் |
| திரு. டி.பி.அஜித் லியனகே | முகாமையாளர் - முகாமைத்துவத் தகவல் முறைமை |
| திரு. எம்.ஏ.வி.ஐ. குமாரசிறி | வெளிக்கள முகாமையாளர் (வினியோக முறைமைக் காண்காணிப்பு) |
| திரு. பி.கே.ஆர். பர்னாந்து | முகாமையாளர் - கப்பல் மேடை |
| செல்வி சி.எஸ். விதானகே | முகாமையாளர் - விற்பனைகள் |
| திருமதி எச்.எச். பியதிகம | கணக்காளர் - இருப்பு மற்றும் விலையிடல் |
| திருமதி டி.என். தேவசுரேந்திர | கணக்காளர் - வருமானம் |
| திருமதி. பி.ஏ.யு. விஜேவர்த்தன | சட்ட அலுவலர் மற்றும் சபை செயலாளர் |
| திரு. பி.எம்.பீ.ஆர். சோமதிலக | முகாமையாளர் - உற்பத்தி (20017.02.08 வரை) |
| திருமதி எம்.டபிள்யு. புஷ்பா ஜெனற் | முகாமையாளர் - மனித வளங்கள் (2017.02.09 - 2017.08.14) |
| திருமதி ஏ.எச். அல்விஸ் | முகாமையாளர் - வழங்கலுக்குப் பிந்திய தொழிற்பாடு |
| செல்வி. எம்.கே.ஏ.பி. குணதிலக | முகாமையாளர் - ஊக்குவிப்பு மற்றும் பிரசாரம் |
| திரு. டீ.ஜீ.டீ.ஜே. புஷ்பகுமார | முகாமையாளர் - களஞ்சியம் சரக்குத்தொக்குக் கட்டுப்பாடு |
| திரு. ஏ.பி. ஹபன்கம | கணக்காளர் - நிதிக்கணக்கீடு |
| திரு. எச்.டீ.என்.ஆர. குணசேகர | முகாமையாளர் - ஒசுசல, கொழும்பு 04 |
| திருமதி. எல். தமயந்தி | கணக்காளர் - சம்பளங்கள் |
| திரு. டீ.கே.ஏ.பி. தசநாயக்க | முகாமையாளர் - மனித வளங்கள் (2017.02.08 வரை)<br>முகாமையாளர் - நிர்வாகம் (2017.02.09 முதல்) |
| திருமதி எம்.ஏ.எஸ். கருணாரத்ன | கணக்காளர் - அரச ஒசுசல |
| திரு. கே.டீ.எப்.என். பெரேரா | முகாமையாளர் - விற்பனைகள் |
| திரு. டபிள்யூ. ஜயந்த | முகாமையாளர் - CPU (காப்புக் கடமை கொ.7. ROS (2016.05.28 முதல்) |
| திரு. யூ.வி. பியசேன | முகாமையாளர் - இறக்குமதிகள் |
| தரு. பீ.எ.கே. மதுசங்க | முகாமையாளர் - மனித வளங்கள் (2017.09.12 முதல்) |

## தலைவரின் செய்தி

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2017ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை வெளியிடுவதை ஒரு சிறப்புரிமையாகக் கருதுகின்றேன்.

எனது முகாமைத்துவத்தின் முதலாவது ஆண்டாகிய 2015ஆம் ஆண்டை திரும்பிப் பார்க்கையில், அது வரிக்கு முந்திய இலாபம் ஒரு பில்லியன் ரூபாவையும் தாண்டி பதிவு செய்த ஒரு திருப்புமுனையாகும். 2017ஆம் ஆண்டில், இரண்டு வருடங்களுக்குப் பின்னரும் நாம் அதனைப் பேணியுள்ளோம். அதிகரித்த செலவினம் மற்றும் சம்பளத் திருத்தங்கள் காணப்பட்ட போதிலும் வரிக்கு முந்திய இலாபம் ரூபா 1.5 மில்லியன் இதற்கு சான்றாகும்.

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் முதலாவது கூட்டு உடன்படிக்கை 2017இல் மேற்கொள்ளப்பட்டது. உன்னதமானதும் பாராட்டத்தக்கதுமான செயலாற்றத்துக்காக ஊழியர்களுக்கு வெகுமதி அளிக்கப்படுதல் வேண்டும் என்னும் கௌரவ அமைச்சரின் உறுதிமொழிக்கு அமைவாக எல்லா ஊழியர்களுக்கும் என்னும் இல்லாதவாறு 50% சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது.

ஒட்டுமொத்த தொழிற்பாடுகளைப் பார்க்கும்போது, மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் எமது சொந்த அரச ஒசுசல வினியோக நிலையங்கள் / வினியோகத்தர்கள் ஆகிய அ.ம.கூ.வின் இரண்டு துறைகளும் மீளாய்வாண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தன.

அரச உடைமையின் கீழ் நிதி ரீதியாக உறுதியான அமைப்பாகத் திகழும் அதேவேளை, மருத்துவ வழங்கல் பிரிவின் கொடுப்பனவு மற்றும் மீளளிப்பு ஆகியவற்றில் தாமதங்கள் காணப்பட்டபோதிலும், பங்கிலாபமாக பொதுத் திறைசேரிக்கு ரூபா. 222 மில்லியனைச் செலுத்துவதற்கு எம்மால் முடிந்தது.

தொழிற்பாட்டில் எமது பிரதான குவிமையம் தர உத்தரவாதம் மிக்க சுகாதார உற்பத்திகளை நியாயமான விலையில் நாட்டு மக்களுக்கு வழங்கி “தேசத்துக்கு சேவையாற்றுவதாகும்”.

அ.ம.கூட்டுத்தாபனம், மருந்துகளின் பாரிய அளவிலான உற்பத்தியாளர் என்ற வகையில் தனியார் சந்தையில் நியாயமான விலையைப் பேணி, 48 மருந்துகளின் 400இற்கு மேற்பட்ட வகைகளுக்கான உச்ச சில்லறை விலையை நடைமுறைப்படுத்துவதில் வெற்றிகரமாகப் பங்களிப்புச் செய்த அதேவேளை, அதன் அரச ஒசுசல விற்பனை நிலையங்களின் வலையமைப்பையும் விரிவாக்கம் செய்தது. அ.ம.கூ. “புதிய மருந்துக் கொள்கையை” நடைமுறைப்படுத்துவதில் பிரதான வகிபாகத்தைக் கொண்டுள்ளதுடன் எதிர்காலத்திலும் பல மருந்துப் பொருட்களின் மருந்துக்கொள்கையை நிலைநாட்டி “இனப்பொதுவியல்பான” மருந்துகளின் பயன்பாட்டையும் மேம்படுத்தும்.

நாட்டின் “புதிய மருந்துக் கொள்கைளை” மேற்கொள்வதற்கான புதிய முன்னெடுப்புகளுடனும் 75% அத்தியாவசியான மருந்துப் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் புரட்சிகரமான நடவடிக்கைகளுடனும் எதிர்வரும் ஆண்டுகளில் அ.ம.கூ.வின் வகிபாகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் சவால்மிக்கதாகவும் அமையும்.

எமக்கு வழிகாட்டலையும் உதவிகளையும் வழங்கிய கௌரவ சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் மற்றும் கௌரவ சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர் ஆகியோருக்கும் சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார அமைச்சின் அதிகாரிகள், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அவரின் பணியாளர்கள், நிதி அமைச்சின் அதிகாரிகள், எனது முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் ஏனைய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், அ.ம.கூ.வின் எல்லா பணியாளர் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கும் எனது பணிவான நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எதிர்வரும் ஆண்டுகளிலும் தாய்நாட்டுக்கு மேலும் பங்களிப்புச் செய்ய முடியும் என்னும் நம்பிக்கையும் விருப்பமும் எமக்குண்டு.

.....

சரத் லியனகே
தலைவர்

## முகாமைத்துவப் பணிப்பாளரின் மீளாய்வு

2017ஆம் ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் செயலாற்றம் தொடர்பாக முகாமைத்துவப் பணிப்பாளரின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். மீளாய்வாண்டில், அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் முன்னொருபோதும் இல்லாத, முன்னைய ஆண்டை விட சற்று அதிகரித்த புரள்வு ரூபா 32,563 மில்லியனைப் பதிவு செய்தது.

அரச வைத்தியசாலைகளில் தர உத்தரவாதமளிக்கப்பட்ட மருந்துகளையும் சுகாதாரப் பராமரிப்புப் பொருட்களையும் தொடர்ச்சியாக வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக "சுகாதார சேவைகள் பிரிவுக்கான" மருந்துப் பொருட்களினதும் சுகாதாரப் பராமரிப்புப் பொருட்களினதும் ஏக இறக்குமதியாளராக அ.ம.கூ. திகழ்கின்றது. அத்துடன் அ.ம.கூ. வடக்கு கிழக்கை உள்ளிட்ட நாடு முழுவதையும் உள்ளடக்கி அதன் பாரியதும் உறுதியானதுமான விநியோக வலையமைப்பின் ஊடாக இறக்குமதி செய்து திறந்த சந்தையில் விற்பனை செய்கின்றது.

### நிதிச் செயலாற்றம்

2017ஆம் ஆண்டில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து புரள்வு ரூபா 6,593 மில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டது. அது 2016ஆம் ஆண்டின் புரள்பு 6,127 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும்போது 7.6% அதிகரிப்பாகும். விற்பனை அதிகரிப்பு பிரதானமாக வலையமைப்பின் விரிவாக்கத்தினால் ஏற்பட்டதாகும். அரச ஒசுசல வலையமைப்பை வலுவூட்டும் நோக்கத்துடன், அ.ம.கூ. 2017ஆம் ஆண்டில் பேருவலை, பிலியந்தலை மற்றும் நிந்தவூர் ஆகிய இடங்களில் அரச ஒசுசல விற்பனை நிலையங்களைத் தாபித்தது. ஆண்டின் இறுதியில், மொத்தமாக 36 அரச ஒசுசல விற்பனை நிலையங்களும் 105 தனியுரிமை பெற்ற விற்பனை நிலையங்களும் 46 வினியோக நிலையங்களும் 10 அதிகாரம் அளிக்கப்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களும் திறந்த சந்தை விற்பனையில் தொழிற்பாட்டில் இருந்தன.




அ.ம.கூ. 2017ஆம் ஆண்டில் வரிக்கு முந்திய இலாபம் ரூபா 1560 மில்லியனைப் பதிவு செய்தது. அ.ம.கூ. 2017 ஜூலை 01ஆம் திகதி முதல் செயற்படும்படியாக கூட்டு உடன்படிக்கையைப் புதுப்பித்ததன் விளைவாக 50% சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது. சம்பளங்கள் மற்றும் ஏனைய தொழிற்பாட்டு செலவினங்களுடன் கூட ரூபா 1560 மில்லியன் இலாபத்தை அ.ம.கூ. வினால் பெற முடிந்தது.

மீளாய்வாண்டில், மருத்துவ வழங்கல் பிரிவுக்கு 2016ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 26,127 மில்லியன் பெறுமதியான சுகாதாரப் பராமரிப்புப் பொருட்களுக்கு எதிராக 25,970 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன.

### வரிவிதிப்பும் அரசாங்கத்துக்கான பங்களிப்பும்

அ.ம.கூ. வருமான வரியாக ரூபா 659 மில்லியனையும் திறைசேரி தீர்வையாக ரூபா 222 மில்லியனையும் செலுத்தியதன் மூலம் மொத்தமாக 881 மில்லியனை அரசாங்க திறைசேரிக்குச் செலுத்தியது.

**விற்பனை மற்றும் வியாபார ஊக்குவிப்பு**

2017ஆம் ஆண்டில், அ.ம.கூ. மருந்துகள் பற்றிய மருத்துவர்களினதும் பொதுமக்களினதும் அறிவை இற்றைப்படுத்துவதற்காக மருத்துவம் தொடர்பான பல நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை அளித்தது. அ.ம.கூ.வின் தாபகத் தலைவர் பேராசிரியர் சேனக பிபிலே அவர்களுக்கு அளிக்கும் ஒரு கௌரவமாக, இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களின் ஆறு மருத்துவப் பீடங்களிலும் மருந்தகவியலில் மிகச் சிறந்த செயலாற்றத்தை மேற்கொண்ட மாணவர்களுக்கு "சேனக பிபிலே ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் நாம் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்கின்றோம். உயர்தர, பாதுகாப்பானதும் பயன்மிக்கவையானதுமான அ.ம.கூ.வின் இனப்பொதுவியல்பான மருந்துகள் மீது கவனம் செலுத்தி மருந்துகளை பகுத்தறிவுடன் பயன்படுத்துதல் பற்றி பொதுமக்களுக்கும் கல்வி கற்ற முதியோர் மற்றும் முதியோர் சங்கங்களுக்கு அறிவூட்டுவதற்காக நாடளாவிய ரீதியில் 30 நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. மேலே சொல்லப்பட்டவற்றுக்குப் புறம்பாக, இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களிலும் விற்பனை ஊக்குவிப்பு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**தொழில்நுட்பமும் ஆய்வுகூடமும்**

அ.ம.கூட்டுத்தாபனத்தினால் சந்தைப்படுத்தப்படும் உற்பத்திகளின் தர நிர்ணயத்தைப் பேணி மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை அது தொடர்ந்தும் மேற்கொண்டது. இதனை உறுதிப்படுத்துவதற்காக அ.ம.கூ.வின் எல்லா மருந்துப்பொருட்களும் "கேள்விப்பத்திர மாதிரிகள்", "கப்பலேற்றுவதற்கு முந்திய மாதிரிகள்", "வினியோகத்துக்கு முந்திய மாதிரிகள" மற்றும் "சந்தை முறைப்பாடுகள்" ஆகிய நான்கு கட்டங்களில் பரிசோரிக்கப்படுகின்றன. அ.ம.கூட்டுத்தாபனத்தின் ஆய்வுகூடத்தில் மருத்துவ வழங்கல் பிரிவின் கேள்விப்பத்திர மாதிரிகளும் பரிசோதிக்கப்படுகின்றன.

**மனித வள அபிவிருத்தி**

மீளாய்வாண்டின் இறுதியில் எமது மொத்த தொழிற்படை 1062ஆகக் காணப்பட்டது. அதில் 909 பேர் நிரந்தர ஊழியர்களாவர். ஏனையவர்கள் அமய ஊழியர்களும் பயிலுனர்களும் ஆகும். கூட்டுத்தாபனத்தின் வெற்றிக்கான பிரதான பங்களிப்புக் காரணி அர்ப்பணிப்பும் ஊக்கமும் உள்ள எமது தொழிற்படையாகும். நிறுவனத்தினுள் அவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நெறியொன்றை வழங்குவதற்காகவும் அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும் 844 ஊழியர்கள் உள்நாட்டு பயிற்சிகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டதுடன் 46 ஊழியர்கள் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

| பயிற்சியின் தன்மை | பயிற்சிகளின் எண்ணிக்கை | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| உள்நாட்டுப் பயிற்சிகள் | 21 | 22 |
| குழுப் பயிற்சிகள் | 14 | 776 |
| வெளிநாட்டுப் பயிற்சிகள் | 12 | 46 |
| மொத்தம் | 47 | 844 |

2017ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட எல்லா பணியாளர் நலன்புரி பயன்களும் 2017ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டன.

**நன்றி நவிலல்**

பதிவு செய்யப்பட்ட வளர்ச்சியை அடைவதில் தமது அர்ப்பணிப்பு மிக்க சேவையை நல்கிய எமது தலைவருக்கும் முகாமைத்துவக் குழுவுக்கும் எல்லா வகுதியையும் சேர்ந்த பணியாளர்களுக்கும் இந்த சந்தர்ப்பத்திலே எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாண்டில் தமது வழிகாட்டலையும் ஆதரவையும் வழங்கிய சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சருக்கும் மற்றும் சுகாதார அமைச்சினதும் நிதி அமைச்சினதும் அதிகாரிகளுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டாக்டர் எம்.எச்.எம். றூமி
முகாமைத்துவப் பணிப்பாளர்

**பணிப்பாளர்களின் அறிக்கை**

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் 2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகளை இத்துடன் சமர்ப்பிக்கின்றனர்.

பொதுத் திறைசேரியில் உள்ள அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அரசாங்கப் பொறுப்பு முயற்சிகளின் வழிகாட்டல்களின் பிரிவு 6.5.1இற்கு இணங்க 2018 பெப்ரவரி 28ஆம் திகதி கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுகள் கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

**உருவாக்கம்**

அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் (SPC) 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டு, இலங்கை அரசின் அங்கீகாரத்துடன் கைத்தொழில்கள் மற்றும் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரால் வழங்கப்பட்ட கட்டளையின் கீழ் 1971 செப்டம்பர் 22ஆம் திகதிய 14776.'.8ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப மூலதனம் ஒரு மில்லியன் ரூபாவாகும்

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 22 முதல் 29 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

**பெறுபேறுகள்**

ஆண்டுக்கான பெறுபேறுகளும் உரிமைப்பங்கில் மாற்றங்களும் வருமானக் கூற்றிலும் உரிமைப்பங்கில் மாற்றங்கள் பற்றிய கூற்றிலும் தரப்பட்டுள்ளன.

**வியாபார மீளாய்வு**

2017 டிசம்பர் 31இல் இருந்தவாறு கூட்டுத்தாபனத்தின் விவகாரங்களின் நிலை நிதிக்கூற்றிலும் இந்நிதியாண்டில் கூட்டுத்தாபனத்தின் மதிப்பீடு முகாமைத்துவப் பணிப்பாளரின் அறிக்கையிலும் தரப்பட்டுள்ளன.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவை திரண்ட தேய்மானம் கழித்த கிரயத்தில் கூறப்பட்டுள்ளன. இவ்வாண்டில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அசைவுகள் நிதிக்கூற்றுகளின் குறிப்பு 16 இல் தரப்பட்டுள்ளன. அதில் காட்டப்பட்டுள்ள பெறுமதி பொருள் ரீதியாக நடைமுறைச் சந்தைப் பெறுமதியிலிருந்து வேறுபட்டதல்ல.

**பிரதான நடவடிக்கைகள்**

கூட்டுத்தாபனத்தின் பிரதான நடவடிக்கைகளாவன:

- திறந்த சந்தையில் மருந்துகளினதும் சுகாதாரப் பராமரிப்புப் பொருட்களினதும் இறக்குமதி, கொள்வனவு, விற்பனைகள் மற்றும் வினியோகம்.
- மருந்துகளையும் சுகாதாரப் பராமரிப்புப் பொருட்களையும் இறக்குமதிசெய்தலும் சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு வழங்குதலும்.
- ஜீவனி, குளுக்கோஸ் மற்றும் பென்சைல் பென்சோவேற் கிறீம் ஆகியவற்றை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தல்.
- மருத்துவச் சோதனைகளையும் ஆய்வுகூடச் சேவைகளையும் வழங்குதல்.

கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் கடந்த நிதியாண்டின் நடவடிக்கைகளிலிருந்து பொருள் ரீதியாக மாற்றமடையவில்லை.

**ஒதுக்கங்கள்**

கூட்டுத்தாபனத்தின் மொத்த ஒதுக்கங்களும் அவற்றின் ஆக்க அமைவும் உரிமைப்பங்கில் மாற்றங்கள் பற்றிய கூற்றில் தரப்பட்டுள்ளன.

**பணிப்பாளர்கள்**

2017 டிசம்பர் 31இல் இருந்தவாறு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| திரு. சரத் லியனகே | தலைவர் |
| டாக்டர் முஹம்மது ஹரிம் முஹம்மது றூமி | முகாமைத்துவப் பணிப்பாளர் |
| ஜனாப். முக்தார் மரிக்கார் | பணிப்பாளர் |
| டாக்டர் பீ.ஜீ.என். ரத்னசேன | பணிப்பாளர் |
| திரு. ஆர். புஷ்ப குமார த சொய்சா | பணிப்பாளர் |
| திரு. ஜி. யவலு சரத் அமுனுகம | பணிப்பாளர் (24.08.2017 முதல்) |
| திரு. எ. கே. சேனவிரத்ன | பணிப்பாளர் (03.0.2007 முதல்) |

**கணக்காய்வுக் குழு**

நல்லாட்சிக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் வழிகாட்டல்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க கூட்டுத்தாபத்தின் கணக்காய்வுக்குழு அமைக்கப்பட்டது.

**கூண்டாண்மைச் செயலாட்சி / உள்ளகக் கட்டுப்பாடு**

கூட்டுத்தாபனம் முழுநிறைவான கூட்டாண்மைச் செயலாட்சிக் கோட்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக முறைமைகளையும் நடைமுறைகளையும் அமைத்துள்ளது. கணக்காய்வுக் குழு அறிக்கை 14 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

**தொழில்வாய்ப்பு**

அ.ம.கூ. ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக பொருத்தமான மனித வள முகாமைத்துவக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது.

**நியதிச்சட்டமுறையான கொடுப்பனவுகள்**

அரசாங்கத்துக்கும் ஊழியர்களுக்குமான எல்லா நியதிச்சட்டமுறையான கொடுப்பனவுகளும் உடனுக்குடன் செலுத்தப்பட்டன.

**சுற்றாடல் பாதுகாப்பு**

சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகள் எவற்றிலும் கூட்டுத்தாபனம் ஈடுபடவில்லை.

**அரசாங்கத்துக்கான பங்களிப்பு**

கூட்டுத்தாபனம் அரச திறைசேரிக்கு பங்கிலாபமாகச் செலுத்திய 659 மில்லியனுக்கு மேலதிகமாக வருமான வரி மற்றும் கருதப்பட்ட பங்கிலாப வரியாக ரூபா 222 மில்லியனை இலங்கை அரசாங்க திறைசேரிக்குச் செலுத்தியுள்ளது.

**கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு**

இவ்வாண்டில் கூட்டுத்தாபனம் அறம்சார் நோக்கத்துக்காக 3,651,600/- ரூவாவைப் பங்களிப்புச் செய்தது.

**ஐந்தொகைக்குப் பிந்திய நிகழ்வுகள்**

நிதிக்கூற்றுகளில் சீராக்கத்தை அல்லது வெளிப்படுத்தலைத் தேவைப்படுத்தும் எவ்வித நிகழ்வும் ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் இடம்பெறவில்லை.

**கணக்காய்வாளர்கள்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி 2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றின் கணக்காய்வை மேற்கொண்டார்.

பணிப்பாளர் சபையின் கட்டளையின் பிரகாரம்

.....

அனுராதா விஜயவர்த்தன

சட்ட அலுவலர் / சபைச் செயலாளர்

## கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

## கணக்காய்வுக் குழுவின் அமைப்பு

கணக்காய்வுக் குழு நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் அல்லாத மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் குழுவின் தவிசாளராகக் கடமையாற்றுவார். 2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த நிதியாண்டில் பின்வரும் உறுப்பினர்கள் கணக்காய்வக் குழுக்களுக்குச் சமுகமளித்தனர்.

| | |
|---|---|
| திரு. ஜி.எஸ். குமார | தலைவர் (2017.05.25 வரை) |
| திரு. ஏ.கே. செனவிரத்ன | தலைவர் (2017.08.03 முதல்) |
| டாக்டர் ஆர்.ஆர்.எம்.எல்.ஆர். சியம்பலாகொட | உறுப்பினர் |
| டாக்டர் பீ.ஜி.என். ரத்னசேன | உறுப்பினர் |
| திரு. முக்தார் மரிக்கார் | உறுப்பினர் |

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் பிரதம கணக்காளரும் அ.ம.கூ.வின் அரசாங்கக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வு அத்தியட்சகரும் அவதானிப்பாளர்களாகக் கூட்டங்களில் பங்குபற்றினர். சபையின் செயலாளரும் உள்ளகக் கணக்காய்வாரும் முறையே குழுவின் செயலாளராகவும் கூட்டத்தைக் கூட்டுபவராகவும் செயலாற்றுகின்றனர்.

### கணக்காய்வுக் குழுவின் பணிகள்

கணக்காய்வுக் குழுவின் பிரதான பணிகள் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்தலும் கண்காணித்தலும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் நிதிச் செயற்பாடுகள் தொடர்பான எல்லா அமசங்களையும் மீளாய்வு செய்து விதப்புரைகளை மேற்கொள்வதன் மூலம் பணிப்பாளர் சபைக்கு உதவுவதுமாகும். இவ்வாண்டில், குழு பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தியது.

1. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வு செய்து மதிப்பிடுவதுடன் அவசியமானவிடத்து மேம்பாடுகளை விதந்துரைத்தல்.
2. 2017ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்தலும் அங்கீகரித்தலும்.
3. உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிக்கைகளை மீளாய்வு செய்து அதன் கண்டுபிடிப்புகள் மற்றும் விதப்புரைகள் பற்றிய முகாமைத்துவத்தின் பதில் நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.
4. 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13(7) (அ) மற்றும் 14(2) (இ) ஆகியவற்றின் பிரகாரம் அறிக்கைகளில் வெளிவாரிக் கணக்காய்வாளர்களால் எழுப்பப்பட்ட கணக்காய்வு விசாரணைகளையும் கருமங்களையும் விசாரணை மீளாய்வு செய்தல்.
5. அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (COPE) விதப்புரைகளின் நடைமுறைப்படுத்தலை மீளாய்வு செய்தல்.

### உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

கணக்காய்வுக் குழுக்களின் வழிகாட்டலின் கீழ், மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் ஓர் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், வினைத்திறனற்ற நடவடிக்கைமுறைகளை ஒழிப்பதற்கும் உள்ளகக் கட்டுப்பாடுகளை மேம்படுத்துவதற்கும் இழப்புகளையும் மோசடி மற்றும் தவறுகள் நடைபெறக்கூடிய சாத்தியமான சந்தர்ப்பங்களை குறைப்பதற்கும் நிதியியல் மற்றும் முறைமைக் கணக்காய்வொன்றை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நடத்தியது.

### கூட்டங்கள்

2016ஆம் ஆண்டில், நான்கு கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதற்கிணங்க, அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

.....

திரு. ஏ.கே. செனவிரத்ன

கணக்காய்வுக் குழுவின் தலைவர்

# இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
## 2017 டிசம்பர் 31இல் இருந்தவாறு நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2017<br>ரூபா. | 2016<br>ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | **16** | 2,062,760,822 | 1,980,968,377 |
| குத்தகைக் காணி - இரத்மலானை | | 9,880,000 | 10,040,000 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை | | 89,595,739 | 156,101,101 |
| அருவச் சொத்துகள் | **17** | 1,804,647 | 3,609,294 |
| பிற நடைமுறையல்லாத சொத்துகள் | **18** | 15,294,117 | 15,911,591 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துகள்** | | **2,179,335,325** | **2,166,630,363** |
| | | | |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| பொருட்பட்டியல்கள் - SPC | **19** | 1,798,402,955 | 2,009,502,353 |
| இடைப்போக்கிலுள்ள இருப்பு - DHS | **20** | 630,130,363 | 540,693,242 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | **21** | 7,901,244,022 | 4,521,175,325 |
| முற்கொடுப்பனவுகள் | **22** | 57,979,683 | 37,614,329 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | **23** | 312,050,502 | 244,947,473 |
| **மொத்த நடைமுறைச் சொத்துகள்** | | **10,699,807,525** | **7,353,932,721** |
| **மொத்த சொத்துகள்** | | **12,879,142,849** | **9,520,563,084** |
| | | | |
| **உரிமைப் பங்கும் பொறுப்புகளும்** | | | |
| பங்களித்த மூலதனம் | | 59,055,258 | 59,055,258 |
| நிறுத்தி வைத்த ஈட்டல்கள் | | 6,792,893,602 | 5,985,037,149 |
| பொது ஒதுக்கங்கள் | | 66,061,447 | 66,061,447 |
| **மொத்த உரிமைப்பங்கு** | | **6,918,010,307** | **6,110,153,853** |
| | | | |
| **நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | | |
| ஓய்வுப் பயன் கடப்பாடு | **24** | 232,516,523 | 153,435,319 |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு | **25** | 32,134,929 | 38,777,329 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | **264,651,453** | **192,212,648** |
| | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள் | **26** | 3,996,134,208 | 2,657,620,323 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | | 337,976,089 | 519,769,910 |
| பிற்போடப்பட்ட வருமானம் | | 926,953 | 1,103,484 |
| நடைமுறை நிதிப் பொறுப்புகள் | **27** | 1,361,443,839 | 39,702,865 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **5,696,481,089** | **3,218,196,582** |
| **மொத்த உரிமைப் பங்கும் பொறுப்புகளும்** | | **12,879,142,849** | **9,520,563,084** |

இந்நிதிக்கூற்றுகளின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பிப்புக்கு பணிப்பாளர் சபையே பொறுப்புவாய்ந்ததாகும்.

சபை சார்பாக பின்வருவோரினால் அங்கிகரித்து ஒப்பமிடப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| சரத் லியனகே<br>தலைவர் | டாக்டர் எம்.எச்.எம்.றூமி<br>முகா. பணிப்பாளர் | கே.எம்.டி.ஆர்.தசநாயக்க<br>பொது முகாமையாளர் | ஹிரண்ய சம்பந்தப்பெரும<br>பி.பொ.முகாமையாளர் - நிதி |

பக்கம் 22 தொடக்கம் 55 வரை உள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுகளின் இன்றியமையாத பகுதியாகும்.

# இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

## 2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமைப்பங்கில் மாற்றம் பற்றிய கூற்று

| | பங்களித்த மூலதனம் ரூபா. | பொது ஒதுக்கங்கள் ரூபா. | திரண்ட இலாபம் ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|---|
| **2014 டிசம்பர் 31இல் இருந்தவாறு மீதி** | **59,055,258** | **66,061,447** | **4,198,874,505** | **4,323,991,210** |
| 2015 ஜனவரி 01இல் இருந்தவாறு மீதி | 59,055,258 | 66,061,447 | 4,198,874,505 | 4,323,991,210 |
| **ஆண்டுக்கான விபரமான மொத்த வருமானம்** | | | | |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | | | 619,598,174 | 619,598,174 |
| வரையறுக்கப்பட்ட பயன் திட்டத்தின் இலாபம் / நட்டம் | | | 239,887,050 | 239,887,050 |
| பிழையாக குறைவாகக் கூறப்பட்ட ஊழியர் ஓய்வுப்பணிக்கொடை திருத்தம் | | | (1,263,395) | (1,263,395) |
| 2015ஆம் ஆண்டில் பிழையாக விளங்கிக்கொள்ளப்பட்ட வங்கிக் கட்டண திருத்தம் | | | (7,853,272) | (7,853,272) |
| **அரசாங்கத் திறைசேரியுடனான கொடுக்கல் வாங்கல்** | | | - | - |
| செலுத்திய திறைசேரி வரி / பங்கிலாபம் | | | (100,000,000) | (100,000,000) |
| **2015 டிசம்பர்31இல் இருந்தவாறு மீதி** | **59,055,258** | **66,061,447** | **4,949,243,062** | **5,074,359,767** |
| 2016 டிசம்பர்31இல் இருந்தவாறு மீதி | 59,055,258 | 66,061,447 | 4,949,243,062 | 5,074,359,767 |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்** | | | | |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | | | 1,241,744,631 | 1,241,744,631 |
| வரையறுக்கப்பட்ட பயன் திட்டத்தின் இலாபம் / நட்டம் | | | 10,049,455 | 10,049,455 |
| **அரசாங்கத் திறைசேரியுடனான கொடுக்கல் வாங்கல்** | | | | |
| செலுத்திய திறைசேரி வரி | | | (216,000,000) | (216,000,000) |
| **2016 டிசம்பர்31இல் இருந்தவாறு மீதி** | **59,055,258** | **66,061,447** | **5,985,037,149** | **6,110,153,853** |
| 2017 ஜனவரி 01இல் இருந்தவாறு மீதி | 59,055,258 | 66,061,447 | 5,985,037,149 | 6,110,153,853 |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்** | | | | |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | | | 1,089,431,741 | 1,089,431,741 |
| வரையறுக்கப்பட்ட பயன் திட்டத்தின் இலாபம் / நட்டம் | | | (59,575,287) | (59,575,287) |
| **அரசாங்கத் திறைசேரியுடனான கொடுக்கல் வாங்கல்** | | | | |
| செலுத்திய திறைசேரி வரி / பங்கிலாபம் | | | (222,000,000) | (222,000,000) |
| **2017 டிசம்பர்31இல் இருந்தவாறு மீதி** | **59,055,258** | **66,061,447** | **6,792,893,602** | **6,918,010,307** |

# இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
## 2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக்கூற்று

| | குறிப்பு | SPC தொழிற்பாடுகள் ரூபா. | DHS தொழிற்பாடுகள் ரூபா. | மொத்த தொழிற்பாடுகள் 2017 ரூபா. | மொத்த தொழிற்பாடுகள் 2016 ரூபா. |
|---|---|---|---|---|---|
| **வருமானம்** | 7 | **6,593,400,956** | **25,970,290,418** | **32,563,691,374** | **32,255,390,820** |
| **கழிக்க:** | | | | | |
| நேரடிச் செலவுகள் - MSD | 8 | | 24,083,263,984 | 24,083,263,984 | 24,277,263,139 |
| விற்பனைக் கிரயம் - SPC | 9 | 4,832,202,660 | | 4,832,202,660 | 4,393,278,237 |
| உற்பத்திக் கிரயம் - ORS | 10 | 80,829,820 | | 80,829,820 | 77,262,126 |
| **மொத்த இலாபம் / மிகை** | | **1,680,368,476** | **1,887,026,434** | **3,567,394,910** | **3,507,587,319** |
| **கூட்டுக:** ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 11 | 53,004,143 | | 53,004,143 | 43,084,880 |
| **கழிக்க:** | | | | | |
| நிர்வாகச் செலவு | 12 | 868,842,252 | 419,341,446 | 1,288,183,698 | 1,101,435,586 |
| ஏனைய தொழிற்பாட்டு இலாபம் | 13 | 258,228,867 | 483,230,113 | 741,458,980 | 580,843,815 |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | **606,301,500** | **984,454,875** | **1,590,756,376** | **1,868,392,798** |
| **கழிக்க:** நிதிச் செலவுகள் | 14 | 1,594,203 | 34,900,495 | 36,494,698 | 6,505,378 |
| **சேர்க்க:** நிதி வருமானம் (பணியாளர் கடன்) | | 5,765,380 | - | 5,765,380 | 5,721,102 |
| **வரிக்கு முன் இலாபம்** | | **610,472,677** | **949,554,381** | **1,560,027,058** | **1,867,608,521** |
| வருமான வரிச் செலவுகள் | 15 | 184,154,231 | 286,441,086 | 470,595,316 | 625,863,890 |
| **வரிக்குப் பிந்திய இலாபம்** | | **426,318,446** | **663,113,295** | **1,089,431,741** | **1,241,744,631** |
| **ஏனைய விரிவான வருமானம்:** | | | | | |
| வரையறுத்த பயன் திட்டத்தின் இலாபம் / நட்டம் | | (26,213,126) | (33,362,161) | (59,575,287) | 10,049,455 |
| **ஆண்டுகான விரிவான மொத்த வருமானம்** | | **400,105,320** | **629,751,134** | **1,029,856,454** | **1,251,794,086** |

# இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

## 2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒசுசல தொழிற்பாடுகளின் வருமானக் கூற்று

| | ஒசுசல வியாபாரம் கொழும்பு - 07 | ஒசுசல வியாபாரம் கொழும்பு - 04 | ஒசுசல வியாபாரம் கொழும்பு - 01 | ஒசுசல வியாபாரம் கண்டி | ஒசுசல வியாபாரம் நுகேகொட | ஒசுசல வியாபாரம் அவிசாவளை | ஒசுசல வியாபாரம் இரத்தினபுரி | ஒசுசல வியாபாரம் மினுவாங்கொட | ஒசுசல வியாபாரம் பாணந்துறை | ஒசுசல வியாபாரம் காலி | ஒசுசல வியாபாரம் மாத்தறை | ஒசுசல வியாபாரம் குருணாகலை | ஒசுசல வியாபாரம் அம்பாறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| விற்பனைகள் | 841,621,398 | 449,707,259 | 227,478,427 | 235,286,176 | 134,856,398 | 56,004,911 | 79,844,110 | 36,064,084 | 92,425,946 | 92,023,820 | 78,102,698 | 141,746,133 | 69,286,315 |
| **விற்பனைக் கிரயமும் மாற்றங்களும்** | 710,230,030 | 396,379,133 | 192,437,956 | 201,848,291 | 111,568,787 | 44,744,985 | 65,589,513 | 29,458,598 | 77,054,562 | 78,554,074 | 63,838,341 | 118,394,597 | 60,699,650 |
| **விற்பனைக் கிரயம் மற்றும் மாற்றங்கள்** | | | | | | | | | | | | | |
| **மீது மொத்த இலாபம்** | **131,391,368** | **53,328,126** | **35,040,472** | **33,437,885** | **23,287,611** | **11,259,927** | **14,254,597** | **6,605,486** | **15,371,384** | **13,469,745** | **14,264,357** | **23,351,536** | **8,586,664** |
| **நிர்வாகச் செலவுகள்** | | | | | | | | | | | | | |
| ஆளணிச் செவுகள் | 54,621,217 | 19,187,741 | 11,911,824 | 19,917,218 | 13,028,501 | 8,678,812 | 13,079,110 | 6,854,313 | 10,569,976 | 15,148,907 | 12,079,621 | 12,202,064 | 6,390,473 |
| பிரயாணச் செலவுகள் | 14,775 | 11,162 | 33,490 | 8,240 | 1,467 | 23,201 | 17,515 | 12,160 | 5,972 | 7,777 | 5,071 | 9,000 | - |
| வழங்கல்கள், தேவைகள் | 816,513 | 278,078 | 216,659 | 289,990 | 136,201 | 92,013 | 160,728 | 117,434 | 154,719 | 107,933 | 42,377 | 67,662 | 93,922 |
| திருத்தங்கள், பராமரிப்பு | 884,783 | 179,594 | 239,252 | 231,502 | 235,433 | 94,073 | 192,903 | 59,932 | 240,210 | 111,458 | 225,173 | 68,790 | 70,976 |
| போக்குவரத்து, தொடர்பாடல் | 12,741,152 | 4,202,030 | 2,237,788 | 4,256,674 | 3,397,610 | 2,901,090 | 3,072,538 | 2,285,244 | 2,743,135 | 2,940,239 | 3,337,135 | 4,754,617 | 2,530,489 |
| பயன்பாடுகள், பிற சேவைகள் | | | | | | | | | | | | | |
| **ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | | | | | | | | | | | |
| விற்பனை, வினியோகச் செலவுகள் | 1,575,464 | 325,350 | 366,615 | 769,215 | 565,713 | 718,807 | 988,329 | 191,792 | 263,064 | 1,010,657 | 347,995 | 169,746 | 805,602 |
| மொத்த மேந்தலைச் செலவுகள் | **70,653,903** | **24,183,955** | **15,005,628** | **25,472,839** | **17,364,925** | **12,507,996** | **17,511,122** | **9,520,876** | **13,977,076** | **19,326,971** | **16,037,372** | **17,271,879** | **9,891,462** |
| **தேறிய இலாபம் / (நட்டம்)** | **60,737,465** | **29,144,171** | **20,034,844** | **7,965,046** | **5,922,687** | **(1,248,069)** | **(3,256,525)** | **(2,915,390)** | **1,394,308** | **(5,857,226)** | **(1,773,015)** | **6,079,658** | **(1,304,797)** |

# இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

## 2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒசுசல தொழிற்பாடுகளின் வருமானக் கூற்று

| | ஒசுசல வியாபாரம் அம்பாந். | ஒசுசல வியாபாரம் அனுராதபுரம் | ஒசுசல வியாபாரம் மஹரகம | ஒசுசல வியாபாரம் ஐ.பர | ஒசுசல வியாபாரம் கராப்பிட்டிய | ஒசுசல வியாபாரம் நீர்கொழும்பு | ஒசுசல வியாபாரம் பதுளை சதொச | ஒசுசல வியாபாரம் தியத்தலாவ | ஒசுசல வியாபாரம் யாழ்ப்பாணம் | ஒசுசல வியாபாரம் பொலன்னறுவை | ஒசுசல வியாபாரம் இரத்மலானை | ஒசுசல வியாபாரம் தங்கல்ல | ஒசுசல வியாபாரம் றாகம |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| விற்பனைகள் | 28,269,012 | 92,745,958 | 96,690,114 | 176,953,272 | 102,932,434 | 78,203,718 | 79,101,374 | 17,680,707 | 62,847,866 | 84,011,912 | 11,975,056 | 36,855,399 | 92,549,553 |
| விற்பனைக் கிரயம், மாற்றங்கள் | 23,459,176 | 76,311,451 | 79,719,579 | 145,094,426 | 87,486,478 | 63,682,160 | 67,297,742 | 14,011,243 | 55,344,859 | 70,213,394 | 9,625,047 | 31,033,670 | 77,640,141 |
| **விற்பனைக் கிரயம் மற்றும் மாற்றங்கள்** | | | | | | | | | | | | | |
| **மீது மொத்த இலாபம்** | **4,809,837** | **16,434,507** | **16,970,535** | **31,858,846** | **15,445,957** | **14,521,558** | **11,803,633** | **3,669,464** | **7,503,008** | **13,798,518** | **2,350,009** | **5,821,729** | **14,909,412** |
| **நிர்வாகச் செலவுகள்** | | | | | | | | | | | | | |
| ஆளணிச் செவுகள் | 5,694,293 | 7,939,396 | 10,678,596 | 23,330,877 | 10,848,775 | 8,058,430 | 8,117,785 | 4,276,624 | 6,559,196 | 6,859,314 | 2,661,391 | 6,295,538 | 7,761,179 |
| பிரயாணச் செலவுகள் | 12,290 | 6,799 | 692 | 3,015 | 34,840 | 950 | 21,599 | 2,297 | 21,905 | 1,981 | 5,380 | 9,607 | 31,800 |
| வழங்கல்கள், தேவைகள் | 52,004 | 92,402 | 33,133 | 436,012 | 54,890 | 134,230 | 105,579 | 114,829 | 109,242 | 121,848 | 26,838 | 30,393 | 118,968 |
| திருத்தங்கள், பராமரிப்பு | 100,659 | 54,857 | 97,747 | 188,031 | 142,509 | 133,199 | 141,418 | 37,435 | 41,886 | 96,450 | 10,719 | 49,737 | 109,462 |
| போக்குவரத்து, தொடர்பாடல் | 2,046,267 | 3,247,459 | 2,739,542 | 4,495,253 | 4,211,851 | 3,223,273 | 2,443,893 | 395,495 | 4,071,975 | 2,701,123 | 225,239 | 1,873,234 | 2,594,014 |
| பயன்பாடுகள், பிற சேவைகள் | | | | | | | | | | | | | |
| **ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | | | | | | | | | | | |
| விற்பனை, வினியோகச் செலவுகள் | 204,098 | 493,386 | 335,416 | 437,432 | 512,942 | 291,066 | 331,296 | 103,708 | 166,697 | 231,226 | 59,580 | 231,099 | 338,822 |
| **மொத்த மேந்தலைச் செலவுகள்** | **8,109,610** | **11,834,300** | **13,885,127** | **28,890,619** | **15,805,807** | **11,841,148** | **11,161,570** | **4,930,388** | **10,970,900** | **10,011,941** | **2,989,147** | **8,489,608** | **10,954,245** |
| **தேறிய இலாபம் / (நட்டம்)** | **(3,299,774)** | **4,600,207** | **3,085,408** | **2,968,227** | **(359,851)** | **2,680,410** | **642,063** | **(1,260,925)** | **(3,467,892)** | **3,786,577** | **(639,139)** | **(2,667,879)** | **3,955,167** |

# இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

## 2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒசுசல தொழிற்பாடுகளின் வருமானக் கூற்று

| **மொத்த கடனாளிகள் மற்றும் பிற வருமதிகள்** | **10,376,255,021** | **6,513,511,971** |

**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்**

2017 **டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள்**

**முற்கொடுப்பனவுகள்** **குறிப்பு 22**

| | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| முற்கொடுப்பனவுகள் | 26,517,539 | 10,322,620 |
| ஊழியர் பிணைய முதலீடுக்கள் | 441,636 | 441,636 |
| வைப்புகள் - தபால் முத்திரையிடல் இயந்திரம் | 698,742 | 525,822 |
| முன்செலுத்திய பணியாளர் செலவுகள் | 4,286,940 | 3,135,116 |
| துறைமுக அதிகார சபைக்கு முற்பணம் | 2,414,409 | 1,657,121 |
| நானாவித வைப்புகள் | 11,850,567 | 11,198,255 |
| கொள்கலன் வைப்புகள் - SPC | 1,740,890 | 1,347,340 |
| கொள்கலன் வைப்புகள் - DHS | 10,028,960 | 8,986,419 |
| **மொத்தம்** | **57,979,683** | **37,614,329** |

**கையிலும் வங்கியிலும் உள்ள காசு** **குறிப்பு 23**

| | | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|---|
| மக்கள் வங்கி | A/C 90210892 | 171,419,803 | 7,442,685 |
| கொமர்ஷல் வங்கி | A/C -10263 | 14,249 | 17,249 |
| இலங்கை வங்கி | A/C -1438 | 67,756,266 | 10,654,012 |
| இலங்கை வங்கி | A/C -1435 | - | 75,903,764 |
| இலங்கை வங்கி | A/C -70556680 | 4,792,985 | |
| ஸ்டன்டர்ட் சாட்டர்ட் வங்கி | A/C 1171968 01 | 7,967,486 | 6,458,957 |
| மக்கள் வங்கி | A/C -90210929 | | 91,312,447 |
| கொமர்ஷல் வங்கி | A/C -50401 | 55,007 | 39,507 |
| **முதலீடுகள்** | | | |
| திறைசேரி உண்டியல் - கடன் காப்புறுதித் திட்டம் | | 46,224,126 | 38,608,499 |
| திறைசேரி உண்டியல் - வழங்குனர் மாநாடு | | 13,192,812 | 13,953,180 |
| சில்லறைக் காசு - கட்டுநிதிக் கட்டுப்பாடு | | 627,767 | 557,172 |
| **மொத்தம்** | | **312,050,502** | **244,947,473** |

**பிற்போடப்பட்ட பொறுப்புகள்** **குறிப்பு 24**

| **ஊழியர் இளைப்பாற்றுப் பணிக்கொடை** | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| பணிக்கொடை ஆரம்ப மீதி | 153,435,319 | 150,917,657 |
| வட்டிக் கிரயம் | 16,110,708 | 15,091,766 |
| நடைமுறை சேவைக் கிரயம் | 16,106,287 | 10,522,662 |
| ஆயுட்கால இலாபம் / நட்டம் | 59,575,287 | (10,049,455) |
| ஆண்டில் செலுத்திய / செலுத்த வேண்டிய நன்மை | (12,711,078) | (13,047,311) |
| **மொத்தம்** | **232,516,523** | **153,435,319** |

ஆயுடகால மதிப்பீடு ஒன்று 2016 டிசம்பர் 31இல் உள்ளவாறு தொழில்சார் ஆயுட்கால கணிப்பு நிறுவனமாகிய "மெசஸ் எக்சுவரியல் அன்ட மெனேஸ்மென்ட் கொன்சல்டன்ஸ் (பிறை) லிமிடெட்" நிறுவனத்தின் திரு.எம். பூபாலநாதன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடுகளைக் கணிப்பதில் ஆயுட்கால மதிப்பீட்டாளரினால் பின்வரும் ஊகங்களும் தரவுகளும் பயன்படுத்தப்பட்டன.

| | |
|---|---|
| கழிவு % | **11% ஆண்டொன்றுக்கு** |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு % | **5% ஆண்டொன்றுக்கு** |
| படி அதிகரிப்பு % | **10% ஆண்டொன்றுக்கு** |
| இளைப்பாறும் வயது | **60 வருடங்கள்** |

**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்**

**2017 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள்**

வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள் பின்வருமாறு

**குறிப்பு 24 அ**

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| நடைமுறை சேவைக் கிரயம் | 16,106,287 | 10,522,662 |
| ஆண்டுக்கான வட்டிக் கட்டணம் | 16,110,708 | 15,091,766 |
| **பணியாளர் ஆகுசெலவில் உள்ளடக்கப்பட்ட பணிக்கெகொடை** | **32,216,995** | **25,614,428** |
| ஆயுட்கணிப்பு இலாபம் / நட்டம் - OCI | 59,575,287 | (10,049,455) |
| **மொத்தம்** | **91,792,283** | **15,564,973** |

**பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் / பொறுப்புகள்**

**குறிப்பு 25**

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| | | |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு | (97,239,556) | (81,739,218) |
| பிற்போடப்பட்ட வரிச்சொத்துகள் | 65,104,627 | 42,961,889 |
| | | |
| ஆரம்ப SLFRS பிற்போடப்பட்ட வரிச்சொத்துகள் / பொறுப்பு | **32,134,929** | **38,777,329** |

**வியாபார மற்றும் பிற சென்மதிகள்**

**குறிப்பு 26**

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| அட்டுறு கட்டணமும் ஏற்பாடும் | 271,888,155 | 207,391,067 |
| கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | 818,160,881 | 523,256,337 |
| விசேட கட்டளை முற்பணம் | 982,510 | 982,510 |
| பிணைய வைப்புகள் | 556,319 | 549,319 |
| சம்பளக் கட்டுப்பாடு | 5,932,124 | 2,075,709 |
| செலுத்தவேண்டிய வங்கிப் பட்டியல்கள் - SPC | 77,938,218 | 144,114,880 |
| செலுத்தவேண்டிய வங்கிப் பட்டியல்கள் - DHS | 2,695,082,859 | 1,705,359,601 |
| காசுப் பிணைய வைப்புகள் மீதான வட்டி | 25,216 | 34,938 |
| கேள்வி வைப்புகள் | 823,050 | 345,000 |
| கடன்கள் மற்றும் பிற அறவீடுகள் (பணியாளர்) | 34,367,301 | 7,649,946 |
| செலுத்தவேண்டிய பணிக்கொடை | 76,247 | 1,340,585 |
| உழைக்கும்போதே செலுத்தும் வரி | 850,171 | 114,943 |
| சேவா வனிதா | 13,780 | 6,980 |
| நலன்புரி நிதி | 803,711 | 680,163 |
| வங்கி உத்தரவாதத்துக்குப் பதிலான காசு வைப்பு | 16,403,679 | 23,180,625 |
| முகவர் தரகு | 41,595,488 | 27,867,936 |
| சேர் பெறுமதி வரி | 30,634,498 | 12,669,782 |
| **மொத்தம்** | **3,996,134,208** | **2,657,620,323** |

**நடைமுறை நிதிப்பொறுப்புகள்**

**குறிப்பு 27**

| | | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| இலங்கை வங்கி | A/C -1435 | 610,245,516 | - |
| இலங்கை வங்கி | A/C -1425 | 116,510,031 | 26,149,718 |
| இலங்கை வங்கி | A/C -70556680 | | 9,635,703 |
| மக்கள் வங்கி | A/C -90210929 | 612,646,295 | - |
| கொமர்ஷல் வங்கி | A/C -150701 | 22,041,997 | 3,917,444 |
| **மொத்தம்** | | **1,361,443,839** | **39,702,865** |

**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்**

**2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள்**

**குறிப்பு - 28**

**மூலதனம்**

2017 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டின்போது அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தில் மாற்றம் இருக்கவில்லை.

**பங்களிக்கப்பட்ட மூலதனம்**

2017 டிசெம்பர் 31இல் இருந்தவாறு பங்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 59,055,258 தொகைக்கான அரசாங்க மானியங்களைக் கொண்டிருந்தது.

**பொது ஒதுக்கம்**

| பொது ஒதுக்கம் | 2017 | 2016 |
|---|---|---|
| டிசம்பர் 31இல் மீதி | ரூபா 66,061,447.00 | ரூபா 66,061,447.00 |

எதிர்கால எதிர்பாரா நிகழ்வுகளுக்கு ஈடு செய்வதற்காக கூட்டுத்தாபனத்தின் பொது ஒதுக்கம் 1992ஆம் ஆண்டுக்கு முந்திய இலாபத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டதுடன் வேறு ஏதேனும் குறித்த நோக்கத்துக்காக மேற்கொள்ளப்படவில்லை.

**குறிப்பு - 29**

**பொறுப்புகளும் ஏற்பாடுகளும்**

2017 டிசம்பர் 31இல் பின்வரும் வழக்குகள் முடிவுறாதிருந்தன. நடவடிக்கை வெற்றியடைவது சாத்தியம் எனவும் வாய்ப்பானதல்ல எனவும் சட்டப் பேரவையினால் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. அதற்கிணங்க இந்த நிதிக்கூற்றுகளில் எவ்வித ஏற்பாடும் மேற்கொள்ளப்படவில்லை.

**29.1. ஐயப்பாடான பொறுப்பு**

**28.1.1 சம்பந்தப்பட்ட அமைப்புகளின் பங்கீடுபாடு உடையோரினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நான்கு வழக்குகளில் கூட்டுத்தாபனம் எதிராளியாக உள்ளது. இந்த வழக்குகள் கூட்டுத்தாபனத்தால் எதிர்கொள்ளப்படுவதுடன் நிதிக்கூற்றுகளில் எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.**

**29.1.2 றெயின் குமார்** - HC ARB 111/98

மெஸர்ஸ் பார்மா நிறுவனத்தைக் கரும்பட்டியலில் சேர்த்த முடிவுகே கதிராக திரு. றெய்ன்குமார் சார்பில் சட்டத்தரணி திரு. செனெவிரத்னவால் கோரிக்கைப்பத்திரமொன்று அனுப்பப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனம் இவ்விடயத்தை சட்ட மாஅதிபர் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தியுள்ளது.

**29.1.3 டபிள்யு.எ.எஸ் விக்கிரமாரச்சி** – CA/WRIT/105/2013

முன்னாள் பிரதிப் பொது முகாமையாளரால் (கொள்வனவு மற்றும் இறக்குமதி) அவரை பதவி இறக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை நீக்குமாறு கோரி ஒரு மனு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

**29.1.4** LT **விண்ணப்ப இல.** LT4/G/28/2016 **(தொழில் நியாய சபை, காலி (திரு. எச்.சி.ஆர். பீரிஸ்)**

ஒரு ஊழியரால் அவர் தொழிலில் இருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக தொழில் நியாய சபையில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதே விடயம் தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தின் விசாரணை முடிவுறாதுள்ளதால் வழக்கு பின்போடப்பட்டுள்ளது.

**29.15** LT **விண்ணப்ப இல.** 13/59/2017 **(தொழில் நியாய சபை இல. 13. (திரு. எம்.என். நயனஜித்)**

இந்த வழக்கு ஒரு ஊழியரால் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக கொழும்பு தொழில் நியாய சபையில் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**28.2 சேதங்களுக்காக சட்ட ரீதியாக 23,372,659.98 ரூபாவைக் கோரும் ஐந்து வழக்குகளில் கூட்டுத்தாபனம் வழக்காளியாக உள்ளது.**

**28.2.1 ஒசுசல - நீர்கொழும்பு வழக்கு இல.** B2666/10

காசாளர் நிதிகளை கையாடிய காரணத்தினால் நீர்கொழும்பு அரச ஒசுசல நிறுவனத்தில் ரூபா 3,863,609.77 காணாமல் போயுள்ளதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அது கைவரப்பெறுதல் நிச்சயமற்ற காரணத்தினால் இந்த ஐயப்பாடான சொத்து நிதிக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படவில்லை.

28.2.2 SAS **பாமசூட்டிகல்கள் - வழக்கு** இல. 7078 M

கூட்டுத்தாபனத்துக்கு வருமதியான ரூ. 769,825.00 கோரிக்கையைத் தீர்ப்பதற்குத் தவறியமைக்காக விநியோகத்தர்களில் ஒன்றான SAS என்ரபிறைசஸ் நிறுவனத்துக்கெதிராக இவ்வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. ஒரு மாவட்ட நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகள் அ.ம.கூட்டுத்தாபனத்துக்கு சாதகமான வழங்கப்பட்டன. ஆனால், ளுயுளு என்ரபிறைசஸ் நிறுவனம் மாவட்ட மற்றும் உயர் நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிராக உயர்நீதிமன்றத்துக்கு இந்த வழக்கை ஆற்றுப்படுத்தியுள்ளது.

**28.2.3 லொயிட் பாமசூட்டிகல்ஸ் - வழக்கு இல.** 6799 M

நிலுவையாக உள்ள 3,229,116.70 ரூபாவை அறவிடுவதற்காக லொயிட் பாமசூட்டிகல்ஸ் வினியோகத்தருக்கு எதிராக அ.ம.கூட்டுத்தாபனம் களுத்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

**28.2.4 நடுத்தீர்ப்பு - இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் எதிர்** M/S **அன்ஹூமி ரியான்கான்ங் மெடிகல் புறடக்ற்ஸ் கம்பனி லிமிரெட்**

கட்டளை இலக்கங்கள் DHS/SWW/45/341R/07 மற்றும் DHS/© SU/172/194K/08-09 தொடர்பாக தரம் குன்றிய பொருட்களுக்காக முறையே ஐ.அ.டொ. 8412 மற்றும் ஐ.அ.டொ. 305,510.30 (ரூபா 930,670 மற்றும் ரூபா 11,423,342) I கோரிய பற்றுக்குறிப்பைத் தீர்க்காத காரணத்தினால் அ.ம.கூ. நடுத்தீர்ப்புக்காக ஆற்றுப்படுத்தியுள்ளது.

**28.2.4 நடுத்தீர்ப்பு - அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் எதிர்** M/S **அரவிந்த ரெமடீஸ் லிமிடெட் - இந்தியா**

கட்டளை இலக்கம் DHS/WEM/73/12 தொடர்பாக தரம் குன்றிய பொருட்களுக்காக 28,733.58 I.m.டொலரை (ரூபா 3,156,096) கோரிய பற்றுக்குறிப்பைத் தீர்க்காத காரணத்தினால் அ.ம.கூ. நடுத்தீர்ப்புக்காக ஆற்றுப்படுத்தியுள்ளது.

**28.3 நிதி ஈடுபாடுகள்**

மருந்துப் பொருட்களின் கொள்வனவுக்காக 31.12.2017இல் இருந்தவாறு தாபிக்கப்பட்ட ஆவணக் கடன்தொகை ரூ. 7.867.3 மில்லியனாகும்.

**குறிப்பு -30**

**நிதி இடர்முகாமைத்துவக் குறிக்கோள்களும் கொள்கைகளும்**

கூட்டுத்தாபனத்தின் பிரதான நிதிப்பொறுப்புகள் கடன்படல்களையும் வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகளையும் கொண்டுள்ளன. இந்நிதிப்பொறுப்புகளின் பிரதான நோக்கம் கூட்டுத்தாபனத் தொழிற்பாடுகளுக்கு நிதி வழங்குதல். கூட்டுத்தாபனத்துக்கு அதன் தொழிற்பாடுகளிலிருந்து நேரடியாக வருகின்ற வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள், காசு மற்றும் குறுகியகால வைப்புக்கள் என்பவை உள்ளன. கூட்டுத்தாபனம் கடன் இடருக்கும் திரவநிதி இடருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகாமை இவ்விடர்களின் முகாமைத்துவத்தைக் கண்காணிக்கின்றது. இவ்விடர்கள் ஒவ்வொன்றையும் சமாளிப்பதற்கான கொள்கைகளைப் பணிப்பாளர் சபை மீளாய்வுசெய்து உடன்படுகின்றது. அவை கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன:

**கடன் இடர்**

**வர்த்தக வருமதிகள்**

வாடிக்கையாளர் கடன் இடர் ஒவ்வொரு வியாபார அலகினாலும் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

| | 2017 | 2016 |
|---|---|---|
| SPC | ரூபா 967,042,539 | ரூபா 552,045,880 |
| DHS | ரூபா 9,267,922,705 | ரூபா 5,771,132,176 |

முக்கிய வாடிக்கையாளர்களுக்குத் தனிப்பட்ட அடிப்படையில் ஒவவே வார் அறிக்கையிடும் தேதியிலும் ஊறுபாட்டுக்கான தேவை பகுப்பாய்வுசெய்யப்படுகின்றது. மேலதிகமாக பெருந்தொகையான சிறு வருமதிகள் ஓரினத் தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டு அவை ஊறுபாட்டுக்குக் கூட்டாக மதிப்பீடுசெய்யப்படுகின்றன. இக்கணிப்பீடு உண்மையாக உறப்பட்ட வரலாற்றுத் தரவை அடிப்படையாகக்கொண்டது. கூட்டுத்தாபனம் பிணையாக வங்கி உத்தரவாதங்களைப் பெறுகின்றது. மேலதிகமாக வங்கி உத்தரவாத எல்லையை விஞ்சிக் கடனுக்கு வாங்க விரும்புகின்ற வாடிக்கையாளர்களிடமிருந்து மிகைக் கட்டணமொன்று அறவிடப்படுகின்றது.

**திரவநிதி இடர்**

கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் வங்கியைப் பயன்படுத்துவதினூடாக நிதியிடலின் தொடர்ச்சிக்கும் நெகிழ்வுத்தன்மைக்கும் இடையில் ஒரு சமநிலையைப் பேணுதல். ஒப்பந்தப்படியான கழிவு வழங்கப்படாத கொடுப்பனவுகளின் அடிப்படையில் தொகுதியின் நிதிப்பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டைக் கீழேயுள்ள அட்டவணை சுருக்கமாகத் தருகின்றது.

| 2017 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு: | (ரூபா) | முதிர்ச்சி |
|---|---|---|
| வட்டியுக் கடன்களும் கடன்படல்களும | 1,361,443,839 | OD கோரிக்கையின்பேரில் செலுத்துவது |
| வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள | 3,996,134,208 | வழமையாக 03 மாதங்கள் |

| 2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு: | (ரூபா) | முதிர்ச்சி |
|---|---|---|
| வட்டியுடனான கடன்களும் கடன்படல்களும் | 39,702,865 | OD கோரிக்கையின்பேரில் செலுத்துவது |
| வர்த்தகம் மற்றும் பிற ஊதியங்கள் | 2,657,620,323 | வழமையாக 03 மாதங்கள் |

| | 2017 | 2016 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வட்டியுடனான கடன்களும் கடன்படல்களும் | 1,361,443,839 | 39,702,865 |
| வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள் | 3,996,134,208 | 2,657,620,323 |
| கழி: காசு மற்றும் குறுகியகால வைப்புகள | (312,050,520) | (244,947,173) |
| தேறிய கடன் | 5,045,527,527 | 2,452,376,015 |
| உரிமைப்பங்கு | | |
| மூலதனம் மற்றும் தேறிய கடன | 12,434,133,150 | 8,562,529,868 |

**குறிப்பு -31**

**தொடர்புடைய தரப்புக் கொடுக்கல்வாங்கல்கள்**

**30.1 அரசுடனும் அரச கட்டுப்பாட்டு நிறுவனங்களுடனும் கொடுக்கல்வாங்கல்கள்**

கூட்டுத்தாபனம் அதன் வழமையான தொழிற்பாடுகளின்போது தொடர்புடைய தரப்புக்களுடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. தொடர்புடைய தரப்புகள் இலங்கை அரசாங்கம் (அரசு : கூட்டுத்தாபனத்தின் இறுதி உரிமையாளராக), பல்வேறு அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரச கட்டுப்பாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. அரசுடனும் அரச கட்டுப்பாட்டு நிறுவனங்களுடனும் கூட்டுத்தாபனம் செய்துள்ள தனிப்பட முக்கியமான மற்றும் தனிப்பட முக்கியமற்றபோதிலும் கூட்டாக முக்கியமான கொடுக்கல்வாங்கல்களினதும் ஏற்பாடுகளினதும் விவரம் பின்வருமாறு:

| கொடுக்கல்வாங்கலின் தன்மை | 2017 | 2016 |
|---|---|---|
| கொடுக்கல்வாங்கல்கள்: | ரூபா | ரூபா |
| விற்பனைகள் - | 32,563,691,394 | 32,255,390,820 |
| | | |
| **தீர்க்கப்படாதுள்ள மீதிகள்:** | | |
| மருத்துவ வழங்கல்கள் பிரிவிடமிருந்து வருமதி | 9,267,922,705 | 5,771,132,176 |
| படையினரிடமிருந்து வருமதி | 349,782,737 | 132,903,168 |
| அரசாங்க வைத்தியசாலைகளிலிருந்து வருமதி | 205,221,465 | 64,645,277 |
| பிற அரசாங்க நிறுவனங்களிடமிருந்து வருமதி | 26,758,075 | 39,820,635 |

**30.2 முக்கிய முகாமைத்துவ ஆக்க அமைவு**

கூட்டுத்தாபனத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணியில் சபைப் பணிப்பாளர்கள், இலங்கைச் சுகாதார அமைச்சர் மற்றும் இலங்கைச் சுகாதார அமைச்சுக்கான செயலாளர் ஆகியோர் அடங்குவர்.

| | 2017 | 2016 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| குறுகியகால ஊழிய நலன்கள் | 4,738,343 | 5,594,012 |

**குறிப்பு -32**

**ஐந்தொகைத் தேதிக்குப் பிந்திய நிகழ்வுகள்**

ஐந்தொகைத் தேதிக்குப் பிந்திய எல்லா முக்கிய நிகழ்வுகளும் கவனத்திற்கொள்ளப்பட்டு, தேவையானவிடத்து நிதிக்கூற்றில் பொருத்தமான சீராக்கலும் வெளிப்படுத்துகைகளும் செய்யப்பட்டுள்ளன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. எச்எஸ்எம்/ஏ/எஸ்பீசீ/1/17/44

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2018 யூலை 26

தலைவர்,
இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

**இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புரைகளும் கருத்துரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை 2018 யூன் 21 ஆந் திகதியன்று கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்தும் நிர்ணயிக்கின்ற

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த வர்த்தகக் கடன்பட்டோரில் 90.55 சதவீதமான ரூபா 9,267,922,705 வைத்திய வழங்கல் பிரிவிலிருந்து பெறப்பட வேண்டியிருந்தபோதும், சுகாதார, போசனை மற்றும் தேசிய வைத்திய அமைச்சினது ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் அம்மீதி ரூபா 9,049,836,862 ஆகவிருந்தது. மீதிகளைக் கணக்கிணக்கம் செய்யும் கூற்றைத் தயாரித்து, ரூபா 218,085,843 வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு, கணக்குகளில் தேவையாக சீராக்கல்களை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 210 கடன் கொடுத்தோரது ரூபா 818,160,881 வர்த்தகக் கடன் கொடுத்தோர் மீதியில் 106 கடன் கொடுத்தோருக்குரிய ரூபா 48,844,761 மீதியை உறுதி செய்வதற்கான சான்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரம் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருத்துவ வழங்கற் பிரிவிலிருந்து பெற வேண்டிய மீதி ரூபா 9,267,922,705 ஆகும். இதில் ரூபா 211,810,803 எட்டு ஆண்டுகளுக்கும் 19 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பழமை வாய்ந்த மீதிகளாகும். ரூபா 9,056,111,902 கடன் சம்பந்தமான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் கொள்கைக்கமைய விற்பனை செய்யப்பட்ட தினத்திலிருந்து 30 முதல் 45 நாட்கள் வரையான காலப்பகுதிக்குள் வர்த்தகக் கடன்பட்டோரது கடனை அறவிட வேண்டுமாயினும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 967,042,539 கடன் மீதியில், தனியார், அரச மற்றும் அரைப்பங்கு அரச உடைமையுடைய நிறுவனங்களிலிருந்து ரூபா 12,327,940 ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகவும் இலங்கை பாராளுமன்றத்திலிருந்து ரூபா 9,044,299 ஓராண்டிற்கு மேலாகவும் அறவிடப்பட வேண்டிய கடனாக இருந்தன. இதனை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. அதில் ரூபா 10,440,049 கடன் மீதியை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

(இ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்த காப்புறுதி இழப்பீடு ரூபா 2,507,547 ஆகும். அதில் ரூபா 1,835,198 ஐ அறவிடுவதற்கு 2 முதல் 12 ஆண்டுகளாக சபை தவறியிருந்தது.

(ஈ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு திருப்பிப் பெற வேண்டிய கொள்கலன் வைப்புக் கணக்கு மீதி ரூபா 11,769,850 ஆகும். இதில் ரூபா 6,462,823 ஐ அறவிடுவதற்கு 2 முதல் 10 ஆண்டுகளாகக் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(உ) மின் உற்பத்தி இயந்திரத்தைப் பழுதுபார்ப்பதற்கு 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 105,672 முற்பணமும் 2007 முதல் 2012 வரையான காலப்பகுதியின்போது வழங்குநர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 2,971,688 முற்பணமும் கணக்காய்வுத் தினமான 2018 மார்ச் 22 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

(ஊ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்குச் செலுத்த வேண்டிய விலைப்பட்டியல் கணக்கினது மீதி ரூபா 2,773,021,077 ஆகும். அதில் ரூபா 4,859,879 மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த வழங்குநர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படாத நூற்றுக்கு நூறு நாணயக் கடிதங்களது பெறுமதியையும் நிறுத்தி வைத்த பணத்தையும் உள்ளடக்கியிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 770 ஆம் நிதிப்பிரமாணம் | (i) | 2016 யூன் 24 முதல் மூடப்பட்டவாறிருக்கும் 3 சுற்றுலா விடுதிகளுக்குரிய நிலையான சொத்துக்கள், 49 நிலையான சொத்துக்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்கோ அல்லது பயன்படுத்த முடியாதவிடத்து நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அப்பொருட்கள் தொடர்பான பொருட் கணிப்புச் சபையினது சிபாரிசுடன் அவற்றை விற்பனை செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும், 2018 மே 03 ஆந் திகதியளவிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படாது அவை கூட்டுத்தாபனத்தின் கீழ்த் தளத்தில் வைக்கப்பட்டிருந்தன. |

(ii) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருட் கணிப்பு அறிக்கையின் பிரகாரம், ரூபா 1,322,750 கிரயமுடைய 117 பொருட்களும் கிரயத்தை குறிப்பிடாத 171 பொருட்களும் பழுதடைந்திருந்தபோதும், நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பொருட் கணிப்புச் சபையை அமைத்து, பயன்படுத்த முடியாத பொருட்களை இனங்கண்டு அவற்றை விற்பனை செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 09/2007(i) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை

பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவள மற்றும் நிர்வாகம்) பிரதி முகாமையாளர் (பராமரிப்பும் நிர்மாண வேலையும்), மேற்பார்வையாளர் ஆகிய பதவிகளுக்கு ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருந்தபோதும் குறித்த அமைச்சின் செயலாளரினது தனிப்பட்ட ரீதியிலான சிபார்சு பெறப்படவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தினது மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 1,089,431,741 நிகர இலாபமாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் நிகர இலாபம் ரூபா 1,241,744,631 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிகர இலாபத்தில் ரூபா 152,312,890 நலிவு காணப்படுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது நிதிசார் செலவினம் ரூபா 29,989,320 அல்லது 461 சதவீதம் அதிகரித்தமையே மேற்படி நலிவுக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்கையில் 2013 முதல் மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக நிகர இலாபம் ஏற்பட்டிருந்தபோதும், அது வருடாந்தம் மாற்றமடைந்தவாறிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில் ரூபா 777,218,094 ஆகவிருந்த நிகர இலாபம் மீளாய்வாண்டு முடிவில் ரூபா 1,560,027,058 ஆகியிருந்தது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் ஊழியர்களது ஊதியம், அரசிறை மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 2,065,476,098 ஆகவிருந்த கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு மாற்றங்களுடன் 2017 ஆம் ஆண்டில் ரூபா 3,261,654,325 வரை அதிகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது பங்களிப்பு 0.7 சதவீதம் குறைவடைந்துமிருந்தது.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

---

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் திரவவியல் விகிதத்தில் நலிவு அவதானிக்கப்பட்டதுடன், கடன்பட்டோர் புரள்வு விகிதம் 1.7 தடவை குறைந்திருந்ததுடன் கடனைத் திருப்பி அறவிடும் காலம் 31 நாட்களால் அதிகரித்துமிருந்தது. இது சம்பந்தமாக கவனம் மேற்கொண்டு கூட்டுத்தாபனத்தின் கடனை அறவிடும் செயற்பாட்டு நடவடிக்கைகள் வினைத்திறன் மிக்கதாக அமைய வேண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 கூட்டுத்தாபனத்திற்கு எதிராக அல்லது கூட்டுத்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்

---

வெளி நிறுவனங்களாலும் உத்தியோகத்தர்களாலும், சாதனையற்ற, பதவி நீக்கம் செய்யப்பட்ட, பதவி நீக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக 04 நீதிமன்ற வழக்குகளும் 05 வெளி நிறுவனங்களுக்கு எதிராகக் கூட்டுத்தாபனத்தால் ரூபா 23,372,660 கூட்டுத் தொகையையுடைய இழப்பீட்டைக் கோரியும் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

### 3.4 செலவினத்தில் அசாதாரண அதிகரிப்பு

---

முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் வங்கி மேலதிகப்பற்று வட்டி முறையே ரூபா 5,434,349 மற்றும் 35,199,403 என்பனவாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அவ்வாறான செலவினம் 548 சதவீத அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவுக்கான வழங்கல் அதிகரித்தபோதும் அவற்றிற்கான பணத்தைப் பெறுவதில் தாமதம் ஏற்படுவதால் வங்கி மேலதிகப்பற்று வசதிகள் அதிகரித்தமையே அதற்கான காரணமாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 செயலாற்றல்

---

#### 4.1.1 திட்டமிடல்

---

கூட்டுத்தாபனம் உருவாகியமை தொடர்பாக 1971 செப்டம்பர் 22 ஆந் திகதிய 14 976/8 ஆம் இலக்க இலங்கை அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நுண்ணிய இரசாயனப் பொருள் உற்பத்தித் தொழிலை உருவாக்குதல் மற்றும் அவற்றிற்கு அனுசரணையாக இருப்பதும், மருந்து விற்பனைகள் தொடர்பாகவும் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பித்தல் போன்ற பிரதான நோக்கங்களை ஈடேற்றுவதற்கு இயலுமானவாறு கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடுகளும் மீளாய்வும்

---

மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய பின்வரும் செயற்பாடுகளை ஈடேற்றுவதற்குச் சபை தவறியிருந்தது.

(i) மருந்துகளை இறக்குமதி செய்யும்போது இடைத்தரகர்கள் இல்லாது நேரடி இறக்குமதிக்கு வழிவகுத்தல்.

(ii) கூட்டுத்தாபனத்தின் சகல செயற்பாட்டுப் பிரிவுகளையும் ஒருங்கிணைப்பதன் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வணிக வளத் திட்டமிடல் முறைமையை இறுதியாக நிறுவுதல் (System training), ஒருசேர செயற்படுத்துதல் (Parallel Run), முறைமையின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ளுதல் (Operational acceptance of the sytem) எனும் கட்டங்களை அமுலாக்குதல்.

(iii) வணிக வளத் திட்டமிடல் முறைமையை வெளி முறைமைகளுடன் ஒருங்கிணைத்தல்.

(iv) வியாபாரத் தொடர்த் திட்டத்தைத் தரப்படுத்துதல் (Upgrade Business Continuity Plan)

(v) புதிய உற்பத்திகளைச் சேர்த்துக் கொள்வதற்கான உற்பத்தி திட்டத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான பதவியணியினருக்கான பயிற்சி, பொருட் கொள்வனவுத் திட்டமிடல் மற்றும் உற்பத்திகளை ஆரம்பித்தல் போன்ற நடவடிக்கைகள்

(vi) ஆய்வுகூட வசதிகளை விரிவாக்குவதற்கான நிர்மாண வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

(vii) நவீன மற்றும் அத்தியாவசிய உபகரணங்களுடன் ஆய்வு கூடங்களை அபிவிருத்தி செய்தல்.

(viii) ஆட்சேர்ப்பு நடைமுறையை மீளாய்வு செய்தல்.

(ix) பொது வசதி அபிவிருத்தியின் கீழ் பராமரிப்புப் பிரிவை சக்திமிக்கதாக்குதல்.

இச்செயற்பாடுகளுள் (ii) ஆம் (viii) ஆம் இலக்கச் செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தன.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

---

2000 செப்டெம்பர் 19 ஆந் திகதியன்று கூட்டுத்தாபனம் பதுளை மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், பதுளை பஸ் தரிப்பிட வர்த்தகக் கூட்டுத்தொகுதியில் உள்ள கட்டிடத்தை குத்தகைக்குப் பெற்று அரச ஒசுசல ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும், 2011 நவம்பர் 17 ஆந் திகதியன்று ஒசுசலவை அக்கட்டிடத்திலிருந்து அப்புறப்படுத்தி 2013 சனவரி 15 ஆந் திகதி தொடக்கம் 5 ஆண்டு காலத்திற்கு மாதாந்தம் ரூபா 55,000 வீதப்படி வேறு நபர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய குத்தகையாளர் 03 மாதங்களுக்குக் குத்தகைத் தொகையை வழங்காதவிடத்து குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்யும் அதிகாரத்தைக் குத்தகைக்கு வழங்குபவர் கொண்டிருந்தபோதும், 2013 செப்டெம்பர் 05 ஆந் திகதியின் பின்னர் 09 மாதங்களாகக் குத்தகையாளர் குத்தகைப் பணத்தை வழங்காது புறக்கணித்திருந்தபோதும், குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. குத்தகைப் பணத்தை கொடுப்பனவு செய்யாதிருந்தமை தொடர்பாக கூட்டுத்தாபனம் அறிவுறுத்தியதன் காரணமாக குத்தகையாளர் அவ்வவ்போது ரூபா 1,890,000 க்கான

காசோலைகளையும் பணத்தையும் வழங்கியிருந்தபோதும், அதில் ரூபா 1,330,000 பெறுமதியுடைய காசோலைகளுக்குக் கொடுப்பனவு மறுக்கப்பட்டு, கணக்காய்வுத் தினமான 2018 மார்ச் 21 ஆந் திகதியளவில் அறவிடுவதற்குத் தவறியிருந்த மொத்த நிலுவை ரூபா 2,003,320 ஆகவிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இடைப்போக்கில் உள்ள கையிருப்புக் கணக்கினது காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 44,621,916 கிரயமுடைய கையிருப்பு 6 மாதங்களுக்கு மேலாகவும் ரூபா 7,574,513 கிரயமுடைய கையிருப்பு ஓராண்டிற்கு மேலாகவும் இடைப்போக்கில் உள்ள கையிருப்புகளாகக் காட்டப்பட்டிருந்தமை உறுதியானது. மருத்துவ வழங்கல் பிரிவால் பொறுப்பேற்கப்பட்ட கையிருப்பு தொடர்பாக வரவுப் பத்திரங்களை வழங்குவதில் நிலவிய தாமதம் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவு பொறுப்பேற்காத கையிருப்பைக் பொறுப்பேற்பதற்கான காரணத்தைக் கண்டறிந்து நிவாரணத்தை தேடாமையால் அக்கையிருப்பு நெடுங்காலமாக இடைப்போக்கில் உள்ள கையிருப்பாக இருந்து வந்தன.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் விற்பனை செய்யப்படுவதற்குக் கொள்வனவு செய்யப்பட்டு, முன்னைய ஆண்டின்போது தரமற்றதாகவும் காலங் கடந்தனவாகவும் காணப்பட்ட மருந்துகளது மொத்தக் கிரயம் முறையே ரூபா 110,007,776 மற்றும் 19,980,259 என்பனவாகும். மீளாய்வாண்டில் தரமற்றதாகவும் காலங் கடந்ததாகவும் காணப்பட்ட மருந்துகளது மொத்தக் கிரயம் முறையே ரூபா 23,561,218 மற்றும் ரூபா 80,834,686 என்பனவாகும். முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் தரமற்றவையாகக் காணப்பட்ட மருந்துகளது மொத்தக் கிரயம் ரூபா 133,568,994 ஆகும். இதில் ரூபா 26,603,418 குறித்த மருந்து வழங்குநர்களிடமிருந்து 2018 மார்ச் 26 ஆந் திகதியளவிலும் அறவிடப்படாதிருந்ததுடன், காலங் கடந்த மருந்துகளால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட மொத்த இழப்பு ரூபா 89,973,349 ஆகவுமிருந்தது.

(இ) மீளாய்வண்டில் செயற்பட்டவாறிருந்த ஒசுசலக்களின் எண்ணிக்கை 37 ஆகும். அவற்றுள் 19 நட்டத்தில் இயங்கியிருந்தன. மொத்த நட்டம் ரூபா 41,286,421 ஆகும். அவிசாவளை, மினுவாங்கொட, தியதலாவ, தங்காலை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், இரத்மலானை ஆகிய நகரங்களில் அமைந்துள்ள 7 ஒசுசலக்கள் 2013 தொடக்கம் மீளாய்வாண்டு வரை தொடர்

நட்டத்திற்குள்ளாகியிருந்தன. நட்டத்தைக் குறைப்பதற்கான வழிவகைகள் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டினது மொத்த நட்டத்தில் 37.54 சதவீதத்தையும் அந்த 7 ஒசுசலக்களே உருவாக்கியுமிருந்தன.

(ஈ) மருத்துவ வழங்கற் பிரிவிற்கு தரமற்றதும் பழுதடைந்ததுமான மருந்துகளை வழங்கியமை மற்றும் குறைந்த எண்ணிக்கையிலான மருந்துகளை வழங்கியிருந்தமை தொடர்பாகச் செலவாகிய கிரயம், நிர்வாகக் கட்டணம், அக்கையிருப்பினை அழிப்பதற்கான செலவினம் போன்றவற்றை வழங்குநரிடமிருந்து அறவிடுவதன் பொருட்டு 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் வழங்கப்பட்டிருந்த வரவுப் பத்திரங்களது பெறுமதி ரூபா 1,303,740,147 ஆகும். எனினும், அதில் ரூபா 579,996,167 அறவிடப்படுவது தவறிப் போனதுடன் அதில் உள்ளடங்கிய ரூபா 104,803,706 தவறிழைத்த வழங்குநர் பட்டியலில் இடப்பட்ட வழங்குநர்களைச் சார்ந்ததால் அதனை அறவிடுவதானது நிச்சயமற்றதாக உள்ளது.

(உ) Ascorbic Acid Tablets BP/USP 100mg மருந்தின் 60,000 கூறுகளை 30,000 கூறுகளாக இரு பொருட்களின் கீழ் கொள்வனவு செய்திருந்ததுடன் இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 நவம்பர் 15 ஆந் திகதியன்று இம்மருந்தின் முதல் 30,000 கூறுகளைக் கூட்டுத்தாபனம் பெற்றிருந்ததுடன் 25,450 கூறுகள் தரமற்றவை என இனங்காணப்படும் வரை அதில் 18,326 கூறுகள் நோயாளிகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. 3,446 கூறுகளைக் கொண்ட மருந்தை வழங்குநர் மீண்டும் வழங்கியிருந்தபோதும், எஞ்சிய 22,004 கூறுகளுக்குரிய ரூபா 11,687,205 கிரயம் மற்றும் அதன் 25 சதவீத தண்டப்பணத் தொகையாகிய ரூபா 2,921,801 என்பவற்றை வழங்குநரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) முதலாவது 30,000 கூறு மருந்தில் 25,450 கூறுகள் தரமற்றவையாகையால் இரண்டாவது 30,000 கூறுகளையும் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தரமற்ற 22,004 கூறுகளுக்குரிய ரூபா 14,609,006 அறவிடப்படாதிருக்க இரண்டாவது 30,000 கூறுகளுக்குமான முழுத் தொகையும் வழங்குநருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) 2015 செப்டெம்பர் 11 ஆந் திகதி பெறப்பட்ட இரண்டாவது 30,000 கூறுகளில் 1,500 கூறுகள் தரமற்றவனவாக இருந்தன. எனினும், 2018 மார்ச் 30 ஆந் திகதியளவிலும் அதன் ரூபா 796,710 கிரயமும் 25 சதவீத தண்டப்பணமான ரூபா 199,177 தொகையையும் வழங்குநரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iv) குறித்த பொருட் கட்டளைக்கான 60,000 கூறு மருந்தை வழங்கி, 03 நாட்களின் பின்னர் அம்மருந்தில் மேலும் 60,000 கூறுகளுக்குப் புதிய பொருட் கட்டளையை வேறொரு வழங்குநருக்குச் சமர்ப்பித்து 2016 சனவரி 05 ஆந் திகதியளவில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 சனவரி 31 ஆந் திகதியளவில் 74,370 கூறுகள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்ததுடன், சராசரி மாதாந்த விற்பனை அளவுக்கு அதிகமாகக் கையிருப்பைக் கொள்வனவு செய்தமையால் முதலாவது வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 27,347 கூறுகளும் இரண்டாவது வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 501 கூறுகளும் அடங்கலாக 27,848 கூறுகளைக் கொண்ட மருந்து 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் காலாவதியாகியிருந்தன. மருந்து காலாவதியாகியதால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 14,827,925 ஆகும்.

## 4.4 பதவியணி நிர்வாகம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் 145 பதவி வெற்றிடங்கள் நிலவின. அவ்வெற்றிடங்களுள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைச் சேர்ந்த 07 நிறைவேற்றுத்தர பதவிகளுக்கும் நிறைவேற்றுத் தரத்தில் அல்லாத பதவியைச் சேர்ந்த 11 பதவிகளுக்கும் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாது பதில் அடிப்படையில் அல்லது வேலையை ஈடு செய்யும் விதத்தில் வேறு பதவிகளில் உள்ள 18 பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். உத்தியோகத்தர்களை நிரந்தரமாக ஆட்சேர்ப்பதற்கான வாய்ப்பிருந்தும் அவ்வாறு நடைபெறாமையால் கூட்டுத்தாபனத்தில் பணி புரியும் அப்பதவிகளுக்கு தகைமை வாய்ந்த உத்தியோகத்தர்கள் நியமனம் பெறும் வாய்ப்பு இழப்புக்குள்ளாகியிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 15 பதவிகளில் 12 உத்தியோகத்தர்கள் நிரந்தரமாகவும் 03 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத முகாமையாளர் (வர்த்தக வள திட்டமிடல்) எனும் பதவிக்கு 05 ஆண்டுகளாகவும் பிரதி முகாமையாளர் பதவிக்கு (பராமரிப்பும் நிர்மாண வேலைகளும்) 06 மாதங்களாகவும் ஒப்பந்த அடிப்படையில் 02 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) நிரந்தர பதவியாகிய பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளமும் நிர்வாகமும்) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு 2017 ஏப்ரல் 28 ஆந் திகதி புதினப் பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்களும் கோரப்பட்டு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் அப்பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். இப்பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய முகாமைத்துவ மட்டத்திலான I ஆந் தர மனிதவள மற்றும் நிர்வாகத் துறைக்குக் குறைந்தது 05 ஆண்டு நிரந்தரப் பதவியில் உள்ள கூட்டுத்தாபனச் சேவையில் உள்ளோர் விண்ணப்பிக்க முடியும். எனினும், பிரசுரிக்கப்பட்ட புதினப் பத்திரிகை விளம்பரத்தில் அத்தகைமை உள்ளடங்காததால் அத்தகைமையுள்ள கூட்டுத்தாபன நிரந்தர உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க இயலாது போனது. மேலும், இவ்வறிக்கைத் திகதி வரை இப்பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) 2017 யூன் 05 தொடக்கம் வெற்றிடமாக இருந்த பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்நுட்ப ஆய்வுகூடம் மற்றும் உற்பத்தி) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு 2017 சனவரி 29 ஆந் திகதி புதினப் பத்திரிகை விளம்பரத்தின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், குறித்த தகைமைகள் இல்லாமை, நேர்முகப் பரீட்சையில் சித்தியடையாமை போன்ற காரணங்களால் விண்ணப்பதாரர் எவரும் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அந்நாள் முதல் கணக்காய்வுத் தினமான 2018 ஏப்ரல் 10 ஆந் திகதியளவில் 11 மாதங்கள் கடந்த நிலையிலும் மீண்டும் விண்ணப்பங்களைக் கோருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) மேம்பாடு மற்றும் பிரசார உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு கூட்டுத்தாபனம் பிரசுரித்த புதினப் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் 191 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. அதில் தகைமை பெற்ற 32 பேருக்கு முதலாம், இரண்டாம் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்தன. இரண்டாவது நேர்முகப் பரீட்சையின் பின்னர், இப்பதவிக்கு மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களது அறிவு இருத்தல் வேண்டுமெனவும் தற்போதுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையின்

தகைமை மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது எனவும் நேர்முகப் பரீட்சைக் குழு அங்கத்தவர் ஒருவரால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும், குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறை மீளாய்வு செய்யப்படாமலும் எதிர்பார்த்த தகைமை உள்ளடக்கப்படாமலும் 3 சந்தர்ப்பங்களில் புதினப் பத்திரிகை விளம்பரங்கள் கோரப்பட்டிருந்தன. இவ்வறிக்கைத் திகதி வரை குறித்த தகைமை வாய்ந்த உத்தியோகத்தரை ஆட்சேர்க்க முடியாதிருந்தது.

(எ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பராமரிப்பும் நிர்மாண வேலைகளும்) பதவிக்கு 2017 மே 21 ஆந் திகதியன்று புதினப் பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு அதன் பொருட்டு 19 விண்ணப்பதாரர் விண்ணப்பித்திருந்தனர். அவ்விண்ணப்பதாரருள் எவருமே தகைமைகளை பெற்றிராததால் ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை எனக் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டபோதும், மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின்போது 2 விண்ணப்பதாரர் கல்வித் தகைமைகளைக் கொண்டிருந்தமை தெரிய வந்தது. இவ்வறிக்கைத் திகதி வரை இப்பதவிக்கான உத்தியோகத்தரைத் தெரிவு செய்ய இயலாது போயிருந்தது.

### 4.5 ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு தொடர்பாக நிதியம் ஒன்றை உருவாக்குதல்

---

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 க்கமைய, எதிர்காலப் பொறுப்புகள் உருவாகும் அபாயத்தைக் குறைத்துக் கொள்வதற்காக ஓய்வு காலப் பணிக்கொடைக் கடப்பாடு சம்பந்தமாக முதலீட்டுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தூண்டுதல் அளிக்கப்பட்டபோதும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை எய்துதல்

---

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

---

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரின் சுற்றறிக்கை மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சிப் பத்திரம் தொடர்பாகக் கூட்டுத்தாபனம் அறிந்திராமையால் அப்பணிகள் சம்பந்தமாக நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ்விலக்கை அடைய வேண்டிய செயற்பாடுகளும் இலக்கை எய்துவதற்கு அளவு கோலாக அமையும் முதலீடுகளையும் இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பொருட் கொள்வனவும் ஒப்பந்த செயற்பாடுகளும்

#### 6.1.1 பொருட் கொள்வனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் விற்பனை செய்வதற்காகக் கொள்வனவு செய்யும் மருத்துவ வழங்கல் மற்றும் ஏனைய சொத்துக்களைக் கொள்வனவு செய்வது சம்பந்தமாக அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டலின்படி பிரதான பொருட் கொள்வனவுத் திட்டமும் பொருட் கொள்வனவு நேர அட்டவணையும் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் கூறு விலைக் கோரல் முறையைக் கடைப்பிடித்து கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின்போது ரூபா 1,236,200 கிரயமுடைய 05 நிழற்பிரதி இயந்திரங்களையும், ரூபா 1,605,400 கிரயமுடைய 02 Fume Hood இயந்திரங்களையும், ரூபா 475,886 கிரயமுடைய 04 பெயர்ப் பலகைகளையும், ரூபா 2,695,163 கிரயமுடைய 61,000 கடதாசிச் சுருள்களையும், ரூபா 1,477,975 கிரயமுடைய Automatic Titrator இயந்திரத்தையும், ரூபா 836,000 கிரயமுடைய 02 குளிரூட்டிகளையும் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) அரசாங்க வழிகாட்டிக் கோவையின் 5.3.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறு விலைக் கோரல் பதிவேடுகளில் தகுதியான மாதிரிகளைப் பயன்படுத்தியிருக்காததுடன் 8.9.1 (ஆ) வழிகாட்டியின் பிரகாரம் முறையான உடன்படிக்கைகளில் ஈடுபட்டிருக்கவுமில்லை.

(ii) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.10 (ஆ) வழிகாட்டியின் பிரகாரம், 05 நிழற்பிரதி இயந்திரங்களுக்கு செயலாற்றல் பிணை முறியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன், குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்த கூறு விலையாளர் வருடாந்த சேவை மற்றும் பராமரிப்புக் கிரயத்தைச் (Annual cost of service and maintenance) சமர்ப்பித்திராதபோதும், அதனைக் கருத்திற் கொள்ளாது வருடாந்த சேவை மற்றும்

பராமரிப்புக் கிரயம் ஆகியவற்றை ஒப்பீட்டளவில் மதிப்பாய்வு செய்யாது, ஆரம்பக் கிரயத்தை இணக்கம் செய்வதினூடாக மாத்திரமே குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்த கூறு விலையாளரைத் தெரிவு செய்திருந்தனர்.

(iii) முறையான உடன்படிக்கையில் ஈடுபடாததுடன் தாமதக் கட்டணத்தை அறவிடும் நிபந்தனைகளை கூறு விலை ஆவணங்களில் உள்ளடக்கத்தால் வழங்குநரிடமிருந்து தாமதக் கட்டணத்தை அறவிட முடியாது போனது.

(iv) ஐந்து நிழற் பிரதி இயந்திரங்களையும் Automatic titrator இயந்திரத்தையும் வழங்குவதற்கான கூறு விலைகளைக் கோரும்போது அவ்வியந்திரங்களுக்கான பராமரிப்பையும் சேவைகளையும் வழங்குவதையும் கூறு விலைக் கோரல் ஆவணங்களில் சேர்த்துக் கொள்ளாமையால் குறித்த கம்பனி சமர்ப்பிக்கும் எதுவித கட்டணத்திலும் பராமரிப்பையும் சேவையையும் பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

(v) அனுராதபுரம் ஒசுசலவிற்குச் பெயர்ப் பலகையை வழங்குதல் மற்றம் அதனைப் பொருத்துதல் தொடர்பாக அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1 (அ) வழிகாட்டிக்கமைய சகல இணைந்த செலவுகளும் அடங்கலாக மொத்த கிரயத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை. இதனை விட, செயலாற்றல் பிணை முறியைப் பெறுவதற்கும் பெயர்ப் பலகைக்கான வெளிச்சத்தை வழங்குவதற்கும் அதனைப் பொருத்துவதற்குமான பொறுப்புக் கூறுவதற்குமான சான்றிதழை பெறுவதற்கும் பெயர்ப் பலகையை வழங்குவதற்கு முன்னர் வழங்குநரால் சமர்ப்பிக்கப்படும் நிர்மாண வேலைகள் (Art work) தொடர்பாகத் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினதும் பொருட் கொள்வனவுக் குழுவினதும் முன் கூட்டிய அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) Tolbutamida Tablets BP / USP 500mg மருந்தினது 15,000 கூறுகளைக் கொள்வனவு செய்வது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இம்மருந்துகளது 15,000 கூறுகளை வழங்குவதற்கான கூறுவிலை கோரல் 2014 பெப்ரவரி 26 ஆந் திகதி நடைபெற்றது. குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்தவர் கேள்விக்கான பிணை முறியைச் சமர்ப்பிக்காததால் இரண்டாவது குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்த வழங்குநருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டபோதும், கூறு விலையாளர் அதனை ஏற்காததால் அவரது கேள்விக்கான பிணை முறியாகிய ரூபா 400,000 காசாக மாற்றமடைய வாய்ப்பிருந்தும் அவ்வாறு செய்யாமையால் 2014 ஒக்தோபர் 22 ஆந் திகதியன்று பிணைமுறி காலாவதியாகியிருந்தது.

(ii) இரண்டாவது குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்த ஒப்பந்தம் ஏற்கப்படாமையால், கேள்விக்கான பிணை முறியைச் சமர்ப்பிக்காத நிராகரிக்கப்பட்ட குறைந்த கூறு விலையாளருக்கு அரசாங்க பொருட் கொள்வனவுக் வழிகாட்டிக் கோவையின் 7.8.4 ஆம் பிரிவுக்கு முரணாக 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களில் உள்ள நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தம் வழங்கப்பட்ட தினத்தன்றும் அக் கேள்வியாளர் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பதிவைப் பெறாதவராக இருந்தார்.

(iii) இம்மருந்தினது தேவைக்கேற்ப, 2014 நவம்பர் மாதமளவில் ரூபா 11,049,640 மொத்தக் கிரயமுடைய 9,500 கூறுகளைக் கொண்ட மருந்தைக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருக்க வேண்டுமாயினும், பொருட் கொள்வனவு நடவடிக்கைகளில் 2014 பெப்ரவரி 26 தொடக்கம் 2015 ஆகஸ்ட் 20 வரை 17 மாதங்களுக்கு அதிகமான காலங் கடந்திருந்ததால் மருந்துகளது கையிருப்பை 2016 சனவரி 05 ஆந் திகதியே கூட்டுத்தாபனம் பெற்றிருந்தது. மருந்தைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2015 யூன் தொடக்கம் 2016 சனவரி 05 வரையான 07 மாதங்களின்போது மருந்துக் கையிருப்பு முடிவடைந்திருந்தது. கொள்வனவு நடைமுறைகளில் அதிக காலம் கழிந்ததால் மருந்து விற்பனையாகக் கூடிய காலத்தில் மருந்தை வழங்க முடியாது விற்பனை குறைவாக உள்ள காலத்தில் தேவைக்கதிகமான மருந்து கிடைக்கப்பெற்றதால் ரூபா 700,308 கிரயமுடைய 560 கூறுகளைக் கொண்ட மருந்து காலாவதியாகியிருந்தன. இதற்குப் புறம்பாக, ரூபா 195,086 கிரயமுடைய 156 கூறுகள் தரமற்றனவாகி கூட்டுத்தாபனம் ரூபா

895,394 இழப்புக்குள்ளாகியது. அதில் ரூபா 320,458 மாத்திரமே 2018 ஆம் ஆண்டின்போது வழங்குநரிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) Formoterol Fumarate and Budesonide Dry Powder capsules (Faracort – DP Caps 400) மருந்தினது 30,000 கூறுகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்குநருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமதக் கட்டணமாகிய ரூபா 20,255,000 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 6.1.2 ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச ஒசுசலவின் கொழும்பு 07 இல் அமைந்துள்ள நிர்மாண வேலைக்கான ரூபா 106,305,300 ஒப்பந்தம் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1 (இ) வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்த வேலை முடிவுற்றதன் பின்னரான நடவடிக்கைகளுக்கான அவசர, எதிர்பாரா நிதியேற்பாடு (Contingeney Provision) மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை.

(ii) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 வழிகாட்டிக்கமைய ஒப்பந்தகாரர் வழங்கிய செயலாற்றல் பிணை முறி 2016 பெப்ரவரி 26 ஆந் திகதி காலாவதியாகியபோதும், 2018 ஏப்ரல் 19 ஆந் திகதியளவிலும் நிர்மாணப் பணிகள் முடிவடையாது இருந்தன. ஆகவே, செயலாற்றல் பிணை முறியினது செல்லுபடிக் காலத்தை நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) பொருட் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமின்றி நிறைவேற்றப்பட்ட மேலதிக வேலைகளுக்கு ரூபா 6,824,841 ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வேலையை நிறைவடையச் செய்வதற்காக மேலும் செலவழிக்க வேண்டியிருந்த ரூபா 15,652,564 அடங்கலாக அங்கீகரிக்கப்படாத மேலதிக வேலைகளது மொத்தக் கிரயம் ரூபா 22,477,405 ஆகவிருந்தது. அங்கீகாரமின்றி மேலதிக வேலைகளை மேற்கொள்வதும் மேலதிக வேலைகளுக்கான நிதியேற்பாடு

இல்லாதிருந்தமையும் காரணமாக 2016 சனவரி 26 முதல் நிர்மாண வேலை நிறுத்தப்பட்டிருந்தது.

(iv) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், நிர்மாண நடவடிக்கைகள் 2015 சனவரி 29 ஆந் திகதியளவில் நிறைவடைய வேண்டுமாயினும், 2018 ஏப்ரல் 19 ஆந் திகதியளவிலும் ரூபா 21,283,641 ஒப்பந்தப் பெறுமதியுடனான முடிவடையாத வேலை, அரைவாசி முடிவடைந்த வேலைகள் மற்றும் மேலதிக வேலைகள் என்பன நிறைவேற்றப்படத் தவறியிருந்ததுடன், தாமதக் காலம் 03 ஆண்டுகளையும் கடந்திருந்தது.

(v) வேலை முடிவடைந்திராத கட்டிடத்தின் ஒப்பந்தப் பெறுமதியாகிய ரூபா 4,010,742 ஏற்புடைய வடிவத்திற்கிணங்காத மின் தூக்கி ஒன்று பொருத்தப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த 24 குளிரூட்டிகளுக்கு ரூபா 5,732,000 ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அவ்வியந்திரங்களது உத்தரவாதக் காலம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) ஒசுசலவிற்கென ரூபா 6,872,500 பெறுமதியான மின் உற்பத்தி சாதனத்தை கொள்வனவு செய்கையில் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.1.4, 6.3.3, 6.3.6, 5.3.11 எனும் வழிகாட்டிகளின் பிரகாரம் முறையே கேள்விகளைக் கோரும் ஆவணங்களுக்குரிய அறிக்கைகளை வைத்திருப்பதற்கும் கேள்வி திறப்பதற்கான குழுவை நியமிப்பதற்கும் கேள்வி திறப்பது தொடர்பான நடவடிக்கைகளைக் குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவத்தில் அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் பெறப்பட்ட கேள்விகளுக்கான பிணை முறி 2016 செப்டெம்பர் 06 ஆந் திகதி காலாவதியாகியதன் பின்னரே பொருட் கொள்வனவு நடைமுறைகளுக்குரிய சகல பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

## 6.2 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2018 யூன் 20 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிராததுடன், 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் அவ்வாண்டின் பொருட்டுத் தயாரிக்கப்பட்ட ஆண்டறிக்கையினது வரைவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது கூட்டுத்தாபனத் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் துறைகளில் உள்ள நலிவுகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்பு |
|---|---|
| (அ) ஒசுசலக்களது செயற்பாடுகள் மீதான கட்டுப்பாடு | இழப்பிற்கான காரணத்தைக் கண்டறிந்து இழப்பைக் குறைப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) பதவியணி முகாமைத்துவம் | வெற்றிடங்களை முறைப்படி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2017 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்று தொடர்பாக 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் உறுப்புரை 14(2)(இ) யின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பான பதில்கள் பின்வருமாறு:**

**2.2 நிதிக் கூற்றுகள் பற்றிய கருத்துரைகள்**

**2.2.1 விளக்கப்படாத வேறுபாடுகள்**

9,267,922,705 ரூபாவுக்கு 2.3(அ)வின் கீழ் கூறப்பட்ட ரூபா 211,810,803ஐ சீராக்கிய பின் பெறுமதி ரூபா 9,056,111,902 ஆகும். காட்டப்பட்ட வேறுபாடு ரூபா 218,085,843 இல் இந்தத் தொகை உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க மருத்துவ வழங்கல் பிரிவின் கணக்கறிக்கையின் பிரகாரம் மீதி ரூபா 9,049,836,862 மற்றும் பற்றுக் குறிப்பில் கணக்கில் இடப்பட்டுள்ள மீதி ரூபா 9,056,111,902 ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடு ரூபா 6,275,040 மட்டுமே ஆகும்.

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துக்கு மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்பட்ட மீதி தொடர்பாக விபரமான ஆவணத்தைப் பெற்று வேறுபாட்டை ஆராய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2.2.2 கணக்காய்வுக்கு போதிய சான்றுகள் இன்மை**

2017 டிசம்பர் 31இல் இருந்தவாறு மொத்த கடனாளிகள் 210 பேரிடமிருந்த கிடைக்க வேண்டிய வணிகக் கடன் ரூபா 818,160,818 இல் 9 கடனாளிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 16,370,840 மாத்திரம் அறவிடப்படவில்லை. பணம் கிடைக்கும்போது செலுத்தும் அடிப்படையில் பெறப்பட்டபோதிலும், சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து பணம் கிடைக்கப்பெறாத விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவை பணம் கிடைக்கும் வரை தீர்க்க முடியாது. எஞ்சிய தொகை ரூபா 801,790,041 செலுத்தப்பட்டுள்ளது.

**2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) கடனாளி காலப் பகுப்பாய்வை சமர்ப்பிக்க முடியாமைக்கான காரணம் எமக்குக் கிடைத்த பணத்திற்கான கொடுப்பனவு விபரம் மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்படவில்லை. ரூபா 22,810,803இற்கு பற்றுக் குறிப்பு மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து கிடைக்கவில்லை.

(ஆ) நிலுவையாக உள்ள மீதி ரூபா 12,327,940, அரச நிறுவனங்களிடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 1,618,798.53, தனியார் துறையிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 269,091.48 மற்றும் சட்ட நடவடிக்கைக்காக ஆற்றுப்படுத்தப்பட்ட ரூபா 10,440,049 ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். ஒரு வருடத்திற்கும் மேலாக பாராளுமன்றத்திடமிருந்து கிடைக்க வேண்டிய 9,044,299 ரூபாவை அறவிடுவது தொடர்பாக கௌரவ சபாநாயகர், சுகாதார செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ள அதேவேளை, இந்த விடயம் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

(இ) கணக்காய்வு விசாரணையின் பிரகாரம், 2017 டிசம்பர் 31ஆம் திகதி உள்ளவாறு கிடைக்கவேண்டிய காப்புறுதிக் கோரல் 2,507,547.00 ரூபாவில் மேலும் அறவிடவேண்டியிருப்பது ரூபா 1,655,097.00 ஆகும். மேலும் கணக்காய்வு விசாரணையின் பிரகாரம், 2 தொடக்கம் 12 வருடங்கள் வரை நிலுவையாக உள்ள ரூபா 1,835,198இல் இன்னும் அறவிடவேண்டியிருப்பது ரூபா 1,191,719.00 ஆகும் என்பதுடன் அதில் ரூபா 702,261.00 சம்பந்தப்பட்ட இருப்பை அழித்த பின்னர் காப்புறுதிக் கோரலுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, ரூபா 288,490.00 பெறுமதியான இருப்பு காப்புறுதிக் கோரலுக்காக அழிக்கப்படவேண்டியுள்ளது. அதன் பிரகாரம், எஞ்சிய பெறுமதி 200,968.00 ரூபாவை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

(ஈ) கணக்காய்வு விசாரணையில் காட்டப்பட்டவாறு 2017.12.31இல் இருந்தவாறு, கிடைக்கவேண்டிய கொள்கலன் வைப்பின் பெறுமதி ரூபா 7,806,806.00 வரை குறைக்கப்பட்டுள்ள அதேவேளை, 02 தொடக்கம் 10 வருடங்கள் வரை நிலுவையாக இருந்த கொள்கலன் வைப்புத் தொகை ரூபா 6,462,823.00 தற்போது ரூபா 5,956,822.00ஆகக் குறைவடைந்துள்ளது. மேலும், கொள்கலன் வைப்பை அறவிடுவதற்காக புதிய முறைமை ஒன்று 2015 செப்டம்பர் மாதத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக அனுப்பப்படாத கொள்கலன் வைப்பு குறிப்பிட்ட காலப்பகுதியினுள் செலுத்தப்படாவிடின், அந்தத் தொகையை வழங்குனருக்கு செலுத்த வேண்டிய தொகையில் இருந்து கழிக்கப்படும். அதன் பிரகாரம், 2015 செப்டம்பர் மாதத்திற்கு முன்னர், அதாவது புதிய முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் இருந்த அறவிட முடியாத கொள்கலன் வைப்பை இன்னும் அறவிட முடியாத நிலைமை காணப்படுவதுடன் அது தொடர்பாக கடந்த ஊழீரு குழுவின் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு, வழங்கப்பட்ட விதப்புரையின் பிரகாரம் அறவிடமுயாதவையாக அடையாளம் காணப்பட்ட ரூபா 5,764,322.00ஐ பதிவழிப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரத்தின் கீழ் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

(உ) **1. மின்பிறப்பாக்கியைத் திருத்துதல் - ரூபா** 105,672/-

சம்பந்தப்பட்ட முற்பணம் ரூபா 105,602.00 Soar Technology இடமிருந்து அறவிடுவதற்கு அவசியமான நட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்ட அலுவலரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல் சிக்கனமானதல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தத் தொகையைப் பதிவழிப்பதற்கு கணக்காய்வுக் குழுவின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2** **வழங்குனருக்கு செலுத்தப்பட்ட ரூபா.** 2,971,688/- **முற்பணம்**

இந்தத் தொகையில் ஒரு பகுதி 2018ஆம் ஆண்டில் அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகை 1,153,942.74 ரூபாவை அறவிடுவதற்கு இறக்குமதிப்பிரிவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஊ) இங்கு "வங்கிக்கு செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்" என்பது "வங்கி செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்" என திருத்தப்பட வேண்டும்.

பல்வேறு காரணங்களால் கூட்டுத்தாபனத்தினால் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்ட வழங்குனர்கள் மற்றும் வழங்குனர்களால் சம்பந்தப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதி வங்கிக்கு வழங்கப்படாத விடயங்கள் இவ்வாறு செலுத்த வேண்டிய கணக்காக எஞ்சியுள்ளன.

தற்போது 03 வருடங்களுக்கு மேலாக பழைமையான எல்லா மீதிகளும் தீர்க்கப்பட்டுள்ளன.

**2.4** **சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்கி ஒழுகாமை**

(அ) குறிப்பிடப்பட்ட பொருட்கள் 2018.05.04ஆம் திகதி நிர்வாகப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் அவற்றுள் அலுவலகத் தேவைகளுக்கு பயன்படுத்தக்கூடிய தளபாடங்களைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏனைய பொருட்களை நிதியியல் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஏல விற்பனை செய்வதற்கனா நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ)

(i) பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்)

இந்தப் பதவிக்காக 2018.08.01ஆம் திகதியிலிருந்து நிரந்தர அலுவலர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்.

(ii) பிரதி முகாமையாளர் (பராமரிப்பு மற்றும் நிர்மாணம்)

இந்தப் பதவியில் சேவையாற்றிய ஒப்பந்த அடிப்படையிலான அலுவலர் தற்போது சேவையிலிருந்து விலகியுள்ளார். இது ஒரு தனியாள்மயப்படுத்தப்பட்ட (personalized) ஒரு பதவியாக இருப்பதால், அதனை தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு புதிய அலுவலர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(iii) மேற்பார்வையாளர்

இந்தப் பதவியில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய அலுவலர் தற்போது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

**4.** **தொழிற்பாட்டு மீளாய்வு**

**4.1.1** **திட்டமிடல்**

கூட்டுத்தாபனத்தின் தற்போதைய வகிபாகம் மற்றும் பணிகளுடன் இந்தத் துறைகள் தொடர்பாக கவனம் செலுத்துவது சிரமம் ஆகும்.

**4.1.2** **செயற்பாடுகளும் மீளாய்வும்**

(i) அடைய முடியாமல் போன இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு எதிர்கால நடவடிக்கைத் திட்டங்களில் கவனம் செலுத்தப்படும்.

(ii) வணிக வளங்கள் முகாமைத்துவ முறைமையில் முறைமையை திட்டமிடும்போதும் நிர்மாணிக்கும்போதும் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல் காரணமாக சொல்லப்பட்ட நடவடிக்கையை திட்டமிடப்பட்ட காலப்பகுதியினுள் முடிவுறுத்துவதற்கு முடியாமல் போனது. துரித திட்டம் ஒன்றின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட நடவடிக்கையை 2019 ஏப்ரல் 30ஆம் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு கருத்திட்ட சேவை வழங்குனருடன் உடன்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(iii) சம்பந்தப்பட்ட நடவடிக்கை, வணிக வளங்கள் முகாமைத்துவ முறைமையுடன் நெருக்கமாக தொடர்புபட்டுள்ளதால், அந்த முறைமை தொடர்பான நடவடிக்கைகள் ஒருங்கே நிறைவுசெய்யப்படும்.

(iv) சம்பந்தப்பட்ட நடவடிக்கையின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு வணிக வளங்கள் முகாமைத்துவ முறைமை நிறுவனத்தில் தகுந்தவாறு தாபிக்கப்படுதல் வேண்டும். எனவே, அந்த நடவடிக்கைகளை 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(v) புதிய உற்பத்திகளை உள்ளடக்குவதற்கு உற்பத்தி திட்டங்களை வகுத்தல் தொடர்பாக பணியாளர் பயிற்சி, கொள்வனவு திட்டமிடல் மற்றும் உற்பத்தியை ஆரம்பித்தல் ஆகியவை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

புதிய உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையிடமிருந்து (NMRA) GMP அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். இது தொடர்பான பூர்வாங்க பரிசோதனைகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் தற்போது குறைபாடுகள் நீக்கப்படுகின்றன. இந்தக் குறைபாடுகளை நிவர்த்திக்கும்வரை இந்தத் திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வது சிரமம் ஆகும்.

(vi) ஆய்வுகூட வசதிகளை விரிவாக்கம் செய்வதற்காக நிர்மாண வசதிகளை மேம்படுத்தல்.

(vii) நவீன மற்றும் அத்தியாவசிய உபகரணங்களுடன் ஆய்வுகூடத்தை மேம்படுததல்

மேலே (vi) மற்றும் (எை) இல் சொல்லப்பட்ட விடயம் தொடர்பாக சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் கலந்துரையாடிய பின்னர், ஆய்வுகூடத்தை விரிவாக்கம் செய்வதற்காக தற்போதுள்ள ஆய்வுகூடத்தின் மேல்மாடிக்கு கொண்டு செல்வதென தீர்மானிக்கப்பட்டது. விபரக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஆய்வுகூடத்தைத் திருத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து விலைமனு கோரும் நடவடிக்கை நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

(viii) ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் திருத்தம் அதன் கடைசிக் கட்டத்தில் உள்ளது.

(ix) பராமரிப்புப் பிரிவை வலுவூட்டுவதற்காக புதிய ஆட்சேர்ப்புக்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**4.2 வரி செலுத்தாமை தொடர்பாக திரு டபிள்யு.எச்.டி. இந்திக பிரசாத்**

(பதுளை பஸ் தரிப்பிட கட்டிடம்)

பதுளை பஸ் தரிப்பிட சந்தைக் கட்டிடத் தொகுதியில் உள்ள கட்டிடத்தை குத்தகைக்குப் பெற்றவருக்கு எதிராக குத்தகைக் கூலி செலுத்தாத காரணத்தினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு முறைப்பாட்டைத் தயாரித்து அதில் அவசியமான விடயங்களை உள்ளடக்குவதற்கும் திருத்துவதற்கும் அவசிமான பின்னிணைப்புகளுடன் 2018.07.04ஆம் திகதி சட்டத்துறைத் தலைமை அதிபதி திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

**4.3 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்**

(அ) கணக்காய்வில் குறிப்பிடப்பட்ட ரூபா 44,621,916 தொடர்பாக எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வழிச்சரக்காக ஒரு வருடத்துக்கும் மேலாக குறிப்பிடப்பட்ட ரூபா 7,574,513 பெறுமதியில் ரூபா 7,512,013 தொடர்பாக எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதில் எஞ்சிய பெறுமதி ரூபா 62,560 வழங்குனரிடமிருந்து அறவிடவேண்டிய தொகையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்தத் தொகையை வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) கூட்டுத்தாபனத்தில் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்டு வருட இறுதியில் தரம் குன்றிக் காணப்பட்ட மருந்தின் பெறுமதி ரூபா 44.9 மில்லியனில் இற்றை வரை ரூபா 39.3 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே, காலாவதியான மருந்துகளின் பெறுமதி ரூபா 69.9 மில்லியனில் ரூபா 19.5 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. சில வழங்குனர்கள் எதிர்காலத்தில் மீள்வழங்கலை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

(இ) குறிப்பிடப்பட் 07 ஒசுசல தொடர்பாக விசேட வேலைத்திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டுள்ளது. அவிசாவளை ஒசுசல புதிய இடத்தில் வணிகத்தை மேற்கொள்வதுடன் மினுவாங்கொட மற்றும் அம்பாந்தோட்டை ஒசுசல நிறுவனங்களின் முகாமைத்துவம் மாற்றப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டில் அவற்றின் விற்பனையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. தியத்தலாவை மற்றும் இரத்மலானை ஆகிய இடங்களில் உள்ள சிறிய ஒசுசல நிறுவனங்களை சமூக சேவையை கவனத்தில் கொண்டு பேணவேண்டியுள்ளது. யாழ்ப்பாண ஒசுசல ஆகஸ்ட் மாதத்தில் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் தங்கல்ல ஒசுசல பிரதேச களஞ்சியமாக மாற்றப்பட்டுள்ளது.

(ஈ) 2017.12.31 ஆம் திகதி அறவிட முடியாத தொகையாக காணப்பட்ட ரூபா 579,996,167இல் 2018.06.30ஆம் திகதி இருந்தவாறு இன்னும் அறவிடவேண்டியிருப்பது ரூபா 556,113,257 ஆகும். அது தொடர்பான விளக்கம் அப்போது சமர்ப்பிக்கப்பட்டது. அந்தத் தொகையில் ரூபா 28 மில்லியன் 2018.06.30 ஆம் திகதிக்கும் 2018.09.30ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியல் கூட்டுத்தாபனத்தினால் அறவிடப்பட்டுள்ளதுடன் 2018.09.30 ஆம் திகதியில் இருந்தவாறு அறவிட முடியாமல் காணப்பட்ட தொகை ரூபா 528,041,019.14 ஆகும். இந்தத் தொகையில் ரூபா 284,859,509.61 கரும்பட்டியலில் இடப்பட்டவர்களிடமிருந்து கிடைக்கவேண்டியவையாகும்.

(உ)

**(i)** இந்த மருந்துகளில் நிறம் மாறுதல் நீங்கலாக வேறு இரசாயன ரீதியான தவறுகள் பரிசோதனையின் பிரகாரம் அறிக்கை செய்யப்படவில்லை. மேலும், 3446 பொதிகள் மாத்திரம் தரம் குன்றியதாக இருந்ததால் பாவனையிலிருந்து அகற்றப்பட்டன.

**(ii)** இவற்றில் முதலாவது தொகுதியில் தரம் குன்றிய முழு அளவையும் இரண்டாவது தொகையுடன் வழங்குமாறு நாம் வேண்டிக்கொண்டவாறு நிறம் மாறிய மருந்துத் தொகுதியுடன் வழங்கப்பட்டது.

(**iii**) இதனை அறவிடுவதற்கு வழங்குனருக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டபோதிலும், அதை அவர் நிராகரித்ததுடன் அதனை உற்பத்தி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு அவர் ஆலோசனை கூறுவது தவறு என்பதால் அந்த வழங்குனரை கரும்பட்டியலில் இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(**iv**) இது அப்போது இருப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவில் சேவையாற்றிய முகாமையாளரால் சரியாக இருப்பை கட்டுப்படுத்தாமல் மேற்கொள்ளப்பட்ட தவறாகும். இது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை தற்போது நடைபெறுகின்றது.

**4.4 பணிப்பாளர் நிர்வாகம்**

**(அ) நிறைவேற்று மட்டத்தில் 07 பதவிகள்**

(1) பிரதிப் பொது முகாமையாளர் (கொள்வனவு மற்றும் இறக்குமதி)

பதில் நியமன அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பதவி தொடர்பாக வழக்கு விசாரணையில் உள்ளதால் தீர்ப்புக் கிடைக்கும் வரை நியமனம் வழங்க முடியாதுள்ளதால் சம்பந்தப்பட்டவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(2) பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்நுட்ப ஆய்வுகூடம் மற்றும் உற்பத்தி)

இநதப் பதவிக்காக 2018.07.03ஆம் திகதி நிரந்தர அலுவலர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்.

(3) முகாமையாளர் - (தொழில்நுட்பம்)

இந்தப் பதவி வெற்றிடத்தை நிரப்புதற்கான விளம்பரம் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்துடன் 2018.09.04ஆம் திகதி நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டன.

(4) பொறுப்பு அலுவலர் - ஒசுசல அனுராதபுரம்

பொறுப்பு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டனர். அந்த அலுவலர்களை நியமிப்பதற்கான இடங்களைத் தெரிவுசெய்வதற்காக பிரதிப் பொது முகாமையாளருக்கு (சந்தைப்படுத்தல்) இந்த விடயம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

(5) முகாமையாளர் - ஒசுசல

இந்தப் பதவிக்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்தி பொருத்தமான ஆட்கள் தெரிவுசெய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அடுத்த அலுவலரை நியமிக்க வேண்டிய இடத்தைத் தீர்மானிப்பதற்காக பிரதிப் பொது முகாமையாளருக்கு (சந்தைப்படுத்தல்) ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

(6) முகாமையாளர் - (மத்திய கொள்வனவு)

இந்தப் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு 2018.10.07ஆம் திகதி பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

(7) முகாமையாளர் - (களங்சியம் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு)

இந்தப் பதவியில் 2018.09.25ஆம் திகதியிலிருந்து நிரந்தர அலுவலர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்.

**மேற்பார்வையாளர்**

2017.12.31ஆம் திகதியில் உள்ளவாறு மேற்பார்வையாளர் பதவியில் காப்பு அலுவலர் 11 பேர் இருந்தனர். 2018.05.01ஆம் திகதியில் மேற்பார்வையாளர் பதவிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. மேற்பார்வையாளர் பதவி வகித்த சில அலுவலர்களும் பதவி உயர்வு பெற்றதால் தற்போது 10 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

(ஆ) ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு - 03

(1) பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்)

இந்தப் பதவிக்காக 2018.08.01ஆம் திதகி நிரந்தர அலுவலர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்.

(2) முகாமையாளர் - (கொள்வனவு)

இந்தப் பதவியில் நியமிக்கப்பட்ட ஒப்பந்த அடிப்படயிலான அலுவலரின்பதவிக்காலம் 2018.10.26ஆம் திகதி முடிவடைந்தது. இந்தப் பதவிக்கு நிரந்தர அலுவலர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்.

(3) முகாமையாளர் - (ER)

இந்தப் பதவிக்கு நிறுவனத்தின் தேவையின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கணனி முறைமையைத் தாபிப்பதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது. இந்த அலுவலரின் பதவிக்காலம் 2018.08.06ஆம் திகதி முடிவடைந்தது.

**நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு - 12**

**தொழிலாளர் (பிஎல் 1) 06 பதவிகள்**

தொழிலாளர் / துப்புரவேற்பாட்டு தொழிலாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய இரண்டு பதவிகளைக் கொண்ட தொழிலாளர்கள், தொழிலாளர் (பிஎல் 1) என்னும் வகுதிக்குள் வருவதால் இரண்டு வகுதிகளிலும் உள்ள வெற்றிடங்களைக் கணக்கிட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமான ஆட்சேர்ப்பு அல்ல. தற்போது இந்த வகுதியில் 13 வெற்றிடங்கள் உள்ளன.

**நிதிப் பொறுப்பாளர் - 05**

2018.03.12ஆம் திகதி முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் கடிதத்தின் மூலம் புதிய ஒசுசல நிறுவனங்களுக்கான நிதி அலுவலர்கள் 03 பேர் அங்கீகரிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 40 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது சேவையில் உள்ள நிதிப் பொறுப்பாளர்களின் எண்ணிக்கை 45 ஆகும். அதன் பிரகாரம், நிதிப் பொறுப்பாளர்கள் 05 பேர் மேலதிகமாக உள்ளபோதிலும், அவர்கள் அனைவரும் ஒசுசல நிறுவனங்களில் அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டுள்ளனர். நிதிப்பொறுப்பாளர்களும் முகாமைத்துவ உதவியாளர் 1.1 (MA 1.1) வகுதியைச் சேர்ந்தவர்களாதலால், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்கள் காணப்படுவதால் முகாமைத்துவ உதவியாளர் 1.1 இல் (MA 1.1) அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணி எண்ணிக்கையை மீறி ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லையாதலால், மேலதிக ஆட்சேர்ப்பாக அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது எமது அபிப்பிராயமாகும்.

(MA 1.1 மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 438. தற்போது சேவையில் உள்ளோர் எண்ணிக்கை 395 ஆகும்.)

**மேற்பார்வையாளர் (தனியாள்மயப்படுத்தப்பட்ட** (personalized)

சம்பந்தப்பட்ட ஆள் மேற்பார்வையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்போது தகுந்த தகைமைகளைக் கொண்டிருந்ததுடன் அவர் MA 2.1 பதவியின் கீழ் இருந்ததால், குறைந்த சம்பளத்தைக் கொண்ட MA 1.1. பதவியில் அமர்த்த முடியாது. எனவே, அவர் தனியாள்மயப்படுத்தப்பட்ட அடிப்படையில் அமர்த்தப்பட்டுள்ளார். அதனை அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கையை மீறி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதாகக் கருத முடியாது.

மேற்பார்வையாளர் பதவி புதிய ஆட்சேர்ப்பு அல்ல. மாறாக, சம்பந்தப்பட்ட தரத்தில் பதவி உயர்வு மட்டுமேயாகும்.

**(இ) முகாமையாளர் (வணிக வள முகாமைத்துவம்)**

இந்தப் பதவிக்கு நிறுவனத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கணனி முறைமையைத் தாபிப்பதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது. மேலும், ஒப்பந்தக்காலம் 2018.08.06ஆம் திகதி முடிவடைந்தது.

**பிரதிப் பொது முகாமையாளர் (பராமரிப்பு மற்றும் நிர்மாணம்)**

இந்தப் பதவியை வகித்தவர் தற்போது ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார். இந்தப் பதவி அதனை வகிப்பவருக்கு தனிப்பட்டதாகும் (personal) என்பதுடன் அது தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும். தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு புதிய அலுவலர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஈ) இந்தப் பதவியில் 2018.08.01 ஆம் திகதி முதல் நிரந்தர அலுவலர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்.

(உ) இந்தப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுதியான அலுவலர் ஒருவர் 2018.07.03ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

C & ஊக்குவிப்பு மற்றும் விளம்பர அலுவலர் பதவிக்கான விளம்பரம் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதால் சம்பந்தப்பட்ட விதப்புரைகளை உள்ளடக்க முடியவில்லை. அவ்வாறே, ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையைத் திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அது முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட விதப்புரைகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**(ஏ) தொழில்நுட்ப அலுவலர் (பராமரிப்பு மற்றும் நிர்மாணம்)**

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக தெரிவிக்கும் விண்ணப்ப இலக்கங்கள் 05 மற்றும் 18 ஆகியவை சம்பந்தப்பட்ட தகைமையைப் பெற்ற பின்னர் 10 வருட அனுபவம் (Post Qualified Expereince) இல்லாத காரணத்தினால் தகைமைவாய்ந்த விண்ணப்பங்களாகக் கருதவில்லை.

**4'5 ஊழியர் பணிக்கொடைக்கான நிதியத்தைக் கட்டியெழுப்புதல்**

இலங்கை கணக்கீட்டு நியமம் (SLAS) 19இன் பிரகாரம், ஊழியர் ஓய்வுப் பயன் நிதியத்தைக் கட்டியெழுப்புதல் கட்டாயம் மேற்கொள்ளவேண்டிய ஒரு நடவடிக்கை அல்ல, ஆனால் விருப்புக்குரியதாகும். ஓய்வுப் பயன் நிதிய முறைமை பொதுவாகக் காணப்படாத ஒன்றாகும். இடர்களைக் குறைப்பதற்காக மாற்று முதலீட்டுத் திட்டம் ஒன்று தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது.

**5'1 நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைதல்**

**எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**6'1'1 கொள்வனவுகள்**

(அ)

மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் தன்மையின் பிரகாரம், வழிகாட்டல்களுககு அமைவாகத் திட்டமிடல் சிரமம் ஆகும்.

(ஆ)

i. எதிர்கால கொள்வனவு நடவடிக்கைகளின்போது சொல்லப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விலைமனு கோரல் வழிகாட்டல்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தயவுடன் தெரிவிக்க விரும்புகின்றோம்.

ii. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்வனவுகளின்போது கொள்வனவு வழிகாட்டல்களின் பிரிவு 5:4:10 இற்கு இசைவாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் நிழற்படப் பிரதி எடுக்கும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனு கோரப்பட்டிருந்தது சேவை உடன்படிக்கைக்குப் புறம்பாக என்பதால் எமது விதிப்புரை ஆவணத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பொருளின் அலகுப் பெறுமதியின் பிரகாரம் விலைமனு மதிப்பிடப்பட்டு கிடைக்கப்பெற்ற விலைமனுக்களில் கணிசமான அளவில் பதிலளித்த மிக்குறைந்த விலையைக் கொண்ட விலைமனு தெரிவுசெய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

iii. தாமதித்த காலப்பகுதிக்கான தாமதக் கட்டணத்தை அறிவிடுதல் என்னும் நிபந்தனையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட பொருட்களை பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கிய நடைமுறைப் பிரச்சினை காரணமாகவும் அதிகூடிய போட்டித்தன்மையைப் பேணுவதற்காகவும் இந்தக் கொள்வனவின்போது அந்த நிபந்தனைகள் விதிக்கப்படவில்லையாயினும், எதிர்கால கொள்வனவுகளின்போது கொள்வனவு வழிகாட்டல்களில் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

iv. நிழற்பிரதி இயந்திரத்தின் வழங்கலுக்கான விலைமனு கோரும்போது சம்பந்தப்பட்ட விதிப்புரைகளை உள்ளடக்கிய ஆவணத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட முழுமையான பராமரிப்புக் கால உத்தரவாதம் கோரப்பட்டது. அதன் பிரகாரம், சம்பந்தப்பட்ட இயந்திரத்துக்கு சாதாரணமாக ஆகக் குறைந்தது ஒரு வருட காலத்துக்கு சம்பந்தப்பட்ட வழங்குனர் கம்பனி உத்தரவாத பொறுப்பைக் கொண்டுள்ளதுடன் அந்த உத்தரவாத காலப்பகுதி முடிவடைந்த பின்னர் பிரயோகிக்கத்தக்க நடவடிக்கைமுறைகளின் பிரகாரம் சேவை உடன்படிக்கை ஒன்றை சம்பந்தப்பட்ட வழங்குனருடன் மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். Automatic Titrator இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட விலைமனு கோரல் ஆவணத்தில் சம்பந்தப்பட்ட இயந்திரத்தை உள்நாட்டு முகவர் ஊடாக இறக்குமதி செய்து பொருத்துதல் வேண்டும் எனவும் எமது வளாகத்தில் அவசியமான பயிற்சி வழங்கப்படுதல் வேண்டும் எனவும் குறிப்பாக விதிக்கப்பட்டிருந்ததுடன் 02 வருட உத்தரவாத காலத்தின் பின்னர் மேலும் 03 வருடங்களுக்கு வருடமொன்றுக்கு இரண்டு 02 தடவை பராமரிப்பு சேவை வழங்கப்படுதல் வேண்டும் எனவும் இயந்திரத்துக்குத் தேவையான உதிரிப் பாகங்கள் இரண்டு வருட உத்தரவாத காலப்பகுதியினுள் வழங்கப்படுதல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, சம்பந்தப்பட்ட வழங்குனர் அந்த இயந்திரத்தை பொருத்திப் பராமரிப்பதற்காக ஆகக்குறைந்தது 05 வருட உத்தரவாதத்தைக் கொண்டுள்ளார் என்பது எமது கருத்தாகும்.

v. பெயர்ப் பலகையைப் பூர்த்தி செய்து பொருத்துவதற்கு சிறிது காலம் சென்றதற்கான காரணம் எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் எனவும் (பெயர்ப் பலகையைப் பொருத்துவதற்கான அனுமதி அனுராதபுர மாநகர சபையிலிருந்து பெறப்படுகின்றது) அதற்கான பொறுப்பு சம்பந்தப்பட்ட கேள்விப்பத்திரதாரருக்கு சாட்டுதல் நியாயமானதல்ல என்பதும் எமது கருத்தாகும். ஆகவே, அதற்கான தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. சொல்லப்பட்ட கேள்விப்பத்திரத்தின் கேள்விப்பத்திர நிபந்தனைகளில் பெயர்ப் பலகைக்கு ஒளி வழங்கி எல்லா பொருத்துதல் வேலைகளுக்காகவும் ஒரு வருட உத்தரவாத காலம் அவசியம் என தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் சம்பந்தப்பட்ட விலைமனுதாரர் அந்த நிபந்தனைகளுக்கு உடன்பட்டு தனது விலைமனுவைச் சமர்ப்பித்திருந்தார். குறிப்பிட்ட நிர்மாணப் பணிகளுக்காக (Art Work) சந்தைப்படுத்தல் பிரிவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பெயர்ப் பலகை பொருத்தப்பட்டதுடன் எதிர்கால கொள்வனவு நடவடிக்கைகளின்போது இங்கு சொல்லப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(இ)

(i) விலை கேட்புப் பிணையம் அறவிட முடியாமல் போனதற்கான காரணம் கொள்வனவுக் குழுவினால் இரண்டாவது ஆகக்குறைந்த விலைமனுதாரருக்கு அவர் சமர்ப்பித்த விலைமனுக்குக் குறைவான தொகைக்கு விலைமனு வழங்கப்பட்டமையினால் ஆகும்.

(ii) அப்போது NMRA பதிவு விஞ்சியதாக இருந்தபோதிலும், அதை அறவிட முடியும் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் கொள்வனவு ஆகக்குறைந்த விலைமனுதாரருக்கு வழங்கப்பட்டது. இந்த மருந்தை கூடுதலான விலைக்குப் பெற்று விற்பனை செய்ய முடியாத காரணத்தினால் இவை எல்லாம் நடைபெற்றன என்பதை குறிப்பிட விரும்புகின்றோம்.

(iii) தரம் குன்றிய மருந்தின் முழுப் பெறுமதி ரூபா 195,085.80 தற்போது செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளது.

(ஈ) தாமதக் கட்டணம் அறவிட வேண்டிய சம்பந்தப்பட்ட கோவை தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்ட முகாமைத்துவ உதவியாளர் தற்போது கூட்டுத்தாபனத்திலிருந்து விலகியுள்ளதால், ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை. விற்பனை செய்ய முடியாத மருந்தின் 800 அலகுகளை கட்டணமின்றிப் பெற்று சொல்லப்பட்ட தொகை முழுமையாகச் செலுத்தித் தீர்க்கப்பட்டது.

**6.1.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

(அ)

**I.** கொள்வனவின்போது தேவையான மேலதிக தொகை விலைமனுவின் ஊடாக மேற்கொள்ளப்படவேண்டுமாயினும், சொல்லப்பட்ட ஆவணங்களைத் தயார்செய்யும்போது ஆலோசகர்களால் இந்தப் பொறுப்பு தவறவிடப்பட்டது.

**II.** கருத்திட்ட முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு ஆலோசனைக் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததால், அது தொடர்பான பிணையங்கள் முனைப்பாக இருப்பதை ஆலோசனை முகவராண்மை உறுதிப்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் சம்பந்தப்பட்ட பிணையம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கொள்வனவு அமைப்பு எவ்வித தலையீட்டையும் மேற்கொள்ளவில்லை.

எனினும், நிர்மாண நிறுவனத்தினால் நிறைவேற்றவேண்டிய விடயங்களுக்காக நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 4,489,415.00 மற்றும் தற்போது பூர்த்திசெய்யப்பட்ட விடயங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 172,131.87 கவனத்தில் கொள்ளப்பட்டு, செலுத்தவேண்டிய தொகை ரூபா 4,661,546.87ஆகக் காணப்பட்டதுடன் செயலாற்ற பிணையத்தின் பெறுமதி ரூபா 5,315,265.00 ஆகக் காணப்பட்டதால், செயலாற்ற பாதுகாப்பு முடிவடைந்த காரணத்தினால் கூட்டுத்தாபனம் எதிர்நோக்கவேண்டிய இடர் குறைவடைந்தது.

**III.** கருத்திட்டத்தின் முடிவடைந்த பகுதிகளுக்கான கொடுப்பனவு ஆலோசனை வழங்கும் முகவராண்மையின் விதப்புரையுடன் மேற்கொள்ளப்படுவதுடன் கருத்திட்டம் தடங்கல் எதுவும் இன்றி தொடர்வதை உறுதிப்படுத்துதவற்காக சம்பந்தப்பட்ட கொடுப்பனவு காலத்துக்குக் காலம் விடுவிக்கப்பட்டது.

எனினும், ஆலோசனை முகவராண்மை மேலதிகப் பணியின் நிர்வாகத்தை மேற்கொள்ளும் என்னும் நம்பிக்கையின் மூலம் அது மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

இருப்பினும், அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின்போது, இற்றைவரை செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளும் உரிமையின் மீதமைவாக, இறுதிக் கொடுப்பனவை மேற்கொள்வதில் தேவையான எல்லா திருத்தங்களையும் மேற்கொள்வதற்கு ஒரு வாய்ப்பு உள்ளது.

**IV.** விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் வேலையைப் பூரணப்படுத்ததாத காரணங்களைக் கவனத்தில் கொண்டு, ஆலோசனை வழங்கும் முகவராண்மையின் விதப்புரையின் பிரகாரம் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், கருத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படாத வேலையின் பெறுமதி ரூபா 2,855,150.00 ஆகக் காணப்பட்டதுடன் பூர்த்திசெய்யப்படாத வேலைகளுக்கான கொடுப்பனவின் தொகை ரூபா 2,775,927.00 ஆகக் காணப்பட்டபோதிலும், இன்னும் பூர்த்தி செய்வதற்கு எஞ்சியுள்ள வேலையின் பெறுமதி ரூபா 15,625,564.00 நிர்மாண நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய குறித்த தொகை அல்ல, ஆலோசனை முகவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு மதிப்பீடாகும்.

**V.** மேலும், மின்னுயர்த்தியின் முழுமையான பரிசோதனைச் சான்றிதழை (Whole Test Certificates) 2018.07.16ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வழங்கிய நிறுவனத்திடம் எழுத்தில் கோரப்பட்டது. எனினும், 2018.08.08ஆம் திகதி வரை சம்பந்தப்பட்ட அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் கோரியதுடன் இற்றை வரை சம்பந்தப்பட்ட அறிக்கை எம்மிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. நினைவூட்டல் கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனத்துடனும் கருத்திட்ட ஆலோசனை நிறுவனத்துடனும் கலந்துரையாடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட மின் உயர்த்தியின் பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் பொருத்தப்பட்டுள்ள மின்னுயர்த்தி விதிப்புரைகளின் பிரகாரம் அமையவில்லை என கருத்திட்ட ஆலோசகரால் தெரிவிக்கப்பட்டதுடன் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சம்பந்தப்பட்ட வழங்கல் நிறுவனத்தையும் கருத்திட்ட ஆலோகரையும் அழைத்து திணைக்கள கொள்வனவுக் குழுவின் தலையீட்டுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன் இதில் எழும் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வழங்கல் நிறுவனத்துக்கு அறிவிக்ப்பட்டது. அவர்கள் அதற்கு சம்மதித்தனர்.

சம்பந்தப்பட்ட கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள 24 வளிச் சீராக்கிகள் இற்றை வரை கட்டிடத்தின் நிர்மாணப்பணிகளைப் பூர்த்திசெய்து கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்காத காரணத்தால் அவற்றின் உத்தரவாத காலம் தொடர்பாக எவ்வித பிரச்சினையும் எழாது என்பது எமது கருத்தாகும்.

(ஆ) சொல்லப்பட்ட அவதானிப்பை ஏற்றுக்கொள்வதுடன் எதிர்கால கொள்வனவு நடவடிக்கைகளின்போது விதித்துரைக்கப்பட்டவாறு விலைமனு கோரும் ஆவணங்களுடன் தொடர்பான தகவல் அறிக்கையைப் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலே சொல்லப்பட்ட விலைமனு கோரல் 2016.04.24ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன் அந்தக் காலப்பகுதியில் விலைமனுக்களைத் திறப்பதற்கான குழு குறிப்பாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். மேலும், விலைமனுக்களைத் திறத்தல் பற்றிய தகவல்கள் கொள்வனவுப் பிரிவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, விலைமனுக்களைத் திறப்பதற்காக விலைமனுக்களைக் கோருவதற்குப் பொறுப்பான அலுவலர் மற்றும் கொள்வனவுப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டு அலுவலர்கள் திறக்கும் குழுவாக செயற்படுவதுடன் உள்ளகக் கணக்காய்வு அலுவலர் ஒருவர் கண்காணிப்பாளராக அதில் பங்குபற்றுவார்.

மேலே சொல்லப்பட்ட கொள்வனவு தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்பப் பொறியியலாளர் திரு. ஏ.ஜி.ஏ.என்.பீ. ஜயசிங்க நியமிக்கப்பட்டதுடன் மிகவும் நெருக்கடியான உத்தியோகபூர்வ வேலைகளின் மத்தியில் இந்தக் கொள்வனவு நடவடிக்கைகளில் அவர் பங்குபற்றி இலங்கை மின்சார சபையினால் இயக்கப்படும் மின் பிறப்பாக்கிகள் பற்றிய பரந்த அறிவைக் கொண்ட இந்த அலுவலரின் கடுமையான வேலை காரணமாக விலைமனுவை மதிப்பிடும் நடவடிக்கைக்கான காலப்பகுதியின் நீடிப்பு ஏற்பட்டது என்பது எமது கருத்தாகும். தற்போது சொல்லப்பட்ட மின்பிறப்பாக்கி எவ்வித பிரச்சினையும் இன்றி இயங்குகின்றது என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

எனினும், எதிர்கால கொள்வனவு நடவடிக்கைகளின்போது சொல்லப்பட்டவாறு விலை கேட்புப் பிணையத்தின் செல்லுபடியாகும் காலப்பகுதியில் வினைத்திறனுடன் கொள்வனவு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**6.2 ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தல்**

ஆண்டறிக்கை மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் 2016ஆம் ஆண்டுக்கான சம்பந்தப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பு 2018 பெப்ரவரி மாதத்தில்தான் எமக்குக் கிடைத்தது. 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஆண்டறிக்கையை அச்சிட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டுக்கான நகல் ஆண்டறிக்கை 2018 ஆகஸ்ட் மாதத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

(அ). நட்டத்தில் இயங்கும் எல்லா ஒசுசல தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் சில இடங்களில் முகாமைத்துவ பதவிகள் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இன்னும் சில இடங்களில் மருந்துப் பொருட்களின் விற்பனையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சரத் லியனகே
தலைவர்
இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
மனித வளங்கள் பாதுகாப்பு

ஊழியர் வகுதிப் பகுப்பாய்வு




ஊழியர் ஒருவருக்கான P.B.T
"000"




ஊழியர் தொடர்ந்திருக்கும் காலப்பகுதி




ஊழியர் ஒருவருக்கான விற்பனை
"000"




ஊழியர் வயதுப் பகுப்பாய்வு




ஊழியர் ஒருவருக்கான சொத்து
"000"



# அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

## பத்தாண்டுச சுருக்கம் - வருமானக்கூற்று

Rs '000'

**புரள்வு**

| விபரம் | 2017 ரூபா | 2016 ரூபா | 2015 ரூபா | 2014 ரூபா | 2013 ரூபா | 2012 ரூபா | 2011 ரூபா | 2010 ரூபா | 2009 ரூபா | 2008 ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புரள்வு - SPC | 6,593,401 | 6,127,478 | 5,286,876 | 4,865,151 | 4,320,300 | 4,283,232 | 4,806,170 | 4,197,759 | 4,015,962 | 3,547,367 |
| புரள்வு - DHS | 25,970,290 | 26,127,912 | 19,176,807 | 17,269,008 | 16,815,666 | 16,608,492 | 12,569,290 | 10,968,571 | 9,990,429 | 9,306,330 |
| **மொத்த புரள்வு** | **32,563,691** | **32,255,390** | **24,463,683** | **22,134,159** | **21,135,966** | **20,891,724** | **17,375,460** | **15,166,330** | **14,006,391** | **12,853,697** |
| மொத்த வணிக இலாபம் - SPC | 1,680,368 | 1,656,938 | 1,410,722 | 1,247,074 | 1,136,403 | 991,541 | 1,043,453 | 995,371 | 894,232 | 822,024 |
| மொத்த மிகை - DHS | 1,887,026 | 1,850,650 | 1,386,731 | 1,333,198 | 1,185,004 | 1,193,214 | 780,735 | 688,145 | 622,071 | 576,308 |
| **மொத்த மிகை** | **3,567,394** | **3,507,588** | **2,797,453** | **2,580,272** | **2,321,407** | **2,184,755** | **1,824,188** | **1,683,516** | **1,516,303** | **1,398,332** |




**மேந்தலைகள்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிற வருமானம் | 53,004 | 43,085 | 51,259 | 25,738 | 17,537 | 15,105 | 23,231 | 20,414 | 18,107 | 22,638 |
| நிர்வாகச் செலவுகள் | (1,288,183) | (1,101,435) | (1,057,970) | (969,744) | (786,904) | (670,635) | (614,019) | (605,475) | (573,322) | (535,428) |
| பிற தொழிற்பாட்டுச் செலவுகள் | (741,459) | (580,843) | (563,357) | (749,825) | (791,794) | (745,230) | (492,631) | (285,777) | (203,520) | (218,987) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | 1,590,756 | **1,868,392** | **1,227,385** | **886,441** | **760,246** | **783,995** | **740,769** | **812,678** | **757,568** | **666,555** |
| நிதிக் கிரயம் | (1,295) | (1,071) | (1,599) | (124) | (227) | (17) | (3,661) | (17,734) | (8,841) | (7,982) |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | (35,199) | (5,434) | (734) | (149,659) | (1,384) | (290,877) | (419,235) | (315,070) | (350,841) | (212,285) |
| **மொத்த மேந்தலைகள்** | **(2,066,136)** | **(1,688,783)** | **(1,623,660)** | **(1,869,352)** | **(1,580,309)** | **(1,706,759)** | **(1,529,546)** | **(1,224,056)** | **(1,136,524)** | **(974,682)** |
| நிதி வருமானம் | 5,765 | 5,721 | 5,086 | 4,896 | 4,357 | 3,959 | 4,102 | 3,900 | 3,302 | 2,856 |
| **வரிக்கு முந்திய வரி** | **1,560,027** | **1,867,608** | **1,230,137** | **741,554** | **762,992** | **497,060** | **321,975** | **483,774** | **401,188** | **449,144** |
| வரிவிதிப்பு | 470,595 | 625,863 | 610,539 | 192,145 | 320,008 | 205,282 | 228,473 | 243,907 | 144,883 | 209,487 |
| **காலத்திற்கான தேறிய இலா.** | **1,089,432** | **1,241,744** | **619,598** | **549,409** | **442,984** | **291,778** | **93,502** | **239,867** | **256,305** | **239,657** |
| வரையறுத்த நன்மைத்திட்டம் | (59,575) | 10,049 | 239,887 | (212,044) | (31,574) | (14,281) | 11,325 | - | - | - |
| **மொத்த விரிவான இலாபம்** | **1,029,856** | **1,251,794** | **859,485** | **337,365** | **411,410** | **277,497** | **104,827** | **239,867** | **256,305** | **239,657** |




**வீதங்கள்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த இலாப வீதம் - SPC ( % ) | 25.5 | 27.04 | 26.68 | 25.63 | 26.3 | 23.15 | 21.71 | 23.71 | 22.27 | 23.17 |
| மொத்த இலாப வீதம் - DHS ( % ) | 7.27 | 7.08 | 7.23 | 7.72 | 7.05 | 7.18 | 6.21 | 6.27 | 6.23 | 6.19 |
| விற்பனைகளுக்கு மொத். மிகை( % ) | 10.96 | 10.87 | 11.44 | 11.66 | 10.98 | 10.46 | 10.50 | 11.10 | 10.83 | 10.88 |
| வருடாந்த விற். வளர்ச்சி ( % ) -SPC | 7.60 | 15.90 | 8.67 | 12.61 | 0.9 | (10.88) | 14.49 | 4.53 | 13.21 | 14.72 |
| வருடாந்த விற். வளர்ச்சி( % ) -DHS | (0.60) | 36.25 | 11.05 | 2.6 | 1.2 | 32.1 | 14.59 | 9.79 | 7.35 | 5.56 |
| மொத்த வற்பனை வளர்ச்சி (%) | 0.96 | 31.85 | 10.52 | 4.72 | 1.17 | 20.24 | 14.57 | 8.28 | 8.97 | 7.94 |

# இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
## பத்தாண்டுச் சுருக்கம் - நிதி நிலைமைக் கூற்று

Rs '000'

| விபரம் | 2017 ரூபா | 2016 ரூபா | 2015 ரூபா | 2014 ரூபா | 2013 ரூபா | 2012 ரூபா | 2011 ரூபா | 2010 ரூபா | 2009 ரூபா | 2008 ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பங்களித்த மூலதனம், ஒதுக்கம்** | **125,117** | **125,117** | **125,117** | **125,117** | **125,117** | **125,117** | **3,502,607** | **3,412,780** | **2,418,452** | **2,217,690** |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | | | | | | | | |
| சரக்கிருப்புகள்ள - SPC | 1,798,403 | 2,009,502 | 2,364,091 | 1,385,477 | 1,703,222 | 1,231,857 | 987,733 | 979,315 | 777,682 | 1,004,208 |
| இடைப்போக்கில் பொருட்கள் - DHS | 630,130 | 540,693 | 788,342 | 528,710 | 809,462 | 734,963 | 1,985,991 | 2,755,465 | 1,105,247 | 1,780,891 |
| வணிக, பிற வருமதிகள் | 7,901,244 | 4,521,175 | 3,051,445 | 2,370,323 | 8,881,602 | 11,113,022 | 5,123,702 | 3,453,354 | 2,139,755 | 2,036,168 |
| வைப்புகளும் முற்கொடுப்பனவுகளும் | 57,979 | 37,614 | 33,046 | 37,964 | 32,948 | 24,073 | 24,479 | 22,369 | 11,564 | 12,367 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 312,050 | 244,947 | 790,525 | 801,717 | 1,200,667 | 216,359 | 600,807 | 671,104 | 263,769 | 250,660 |
| **மொத்த நடைமுறைச் சொத்துகள்** | **10,699,807** | **7,353,931** | **7,027,449** | **5,124,191** | **12,627,901** | **13,320,274** | **8,722,712** | **7,881,607** | **4,298,017** | **5,084,294** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | | | | | | | |
| வணிக, பிற கொடுப்பனவுகள் | 3,996,134 | 2,657,620 | 3,347,410 | 2,235,194 | 3,649,362 | 3,032,684 | 1,784,156 | 1,551,401 | 739,514 | 544,979 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 337,976 | 519,770 | 397,758 | 180,617 | 290,045 | 191,440 | 219,332 | 232,469 | 200,169 | 225,239 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 927 | 1,103 | 1,005 | 748 | 889 | 1,292 | 318 | 1,559 | - | - |
| நடைமுறை நிதிப் பொறுப்புகள் | 1,361,444 | 39,703 | 56,689 | 78,739 | 6,254,353 | 7,896,709 | 4,716,655 | 4,131,544 | 1,458,538 | 2,596,234 |
| **மொத்த நடை. பொறுப்புகள்** | **5,696,481** | **3,218,196** | **3,802,862** | **2,495,298** | **10,194,649** | **11,122,125** | **6,720,461** | **5,916,973** | **2,398,221** | **3,366,452** |
| நடைமுறையல்லாத சொத்துகள் | 2,179,335 | 2,166,630 | 2,156,615 | 2,138,973 | 1,858,832 | 1,698,279 | 1,605,438 | 1,561,496 | 639,231 | 595,014 |
| நடைமுறையல்லாத பொறுப்புகள் | 264,651 | 192,213 | 233,394 | 372,220 | 158,803 | 124,558 | 105,082 | 113,350 | 120,575 | 95,166 |
| **தேறிய சொத்துகள்** | **6,918,010** | **6,110,152** | **5,147,807** | **4,395,646** | **4,133,281** | **3,771,870** | **3,502,607** | **3,412,780** | **2,418,452** | **2,217,690** |




| **விகிதங்கள்** | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சொத்துப் புரள்ளு (மடங்குகள்) | 1:2.53 | 1:3.39 | 1:2.66 | 1:3.05 | 1:1.46 | 1:1.39 | 1:1.68 | 1:1.61 | 1:2.84 | 1:2.26 |
| நடைமுறை விகிதம் (மடங்குகள்) | 1:1.88 | 1:2.29 | 1:1.85 | 1:2.05 | 1:1.24 | 1:1.2 | 1:1.3 | 1:1.33 | 1:1.79 | 1:1.51 |
| திரவ விகிதம் (மடங்குகள்) | 1:1.45 | 1:1.49 | 1:1.01 | 1:1.28 | 1:0.99 | 1:1.02 | 1:0.85 | 1:0.7 | 1:1. | 1:0.68 |
| வட்டிக்காப்பு (மடங்குகள்) | 45.32 | 344.6 | 1676.9 | 5.95 | 552.3 | 2.7 | 1.8 | 2.5 | 2.1 | 3.1 |
| இருப்புப் புரள்வு வீதம் (மடங்கு) SPC | 2.54 | 2.04 | 2.07 | 2.34 | 2.17 | 2.97 | 3.83 | 3.65 | 3.5 | 3.11 |

# விற்பனை வலையமைப்பு

## தலைமை அலுவலகம்

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
75, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி: 011-2320356 – 9 தொலைநகல்: 011-2447118
இணையத்தளம்: www.spc.lk மின்னஞ்சல்: spc@spc.lk

**விற்பனைப் பிரிவு**
109 கந்தவல எஸ்ரேட்,
இரத்மலானை.
தொலைபேசி: 011-2632288
தொலைநகல்: 011-2632962

**களஞ்சியம்**
109 கந்தவல எஸ்ரேட்,
இரத்மலானை.
தொலைபேசி: 011-2634318
தொலைநகல்: 011-2636715

**ஓ.ஆர்.எஸ். பிரிவு**
109 கந்தவல எஸ்ரேட்,.
இரத்மலானை.
தொலைபேசி: 011-2622334

**கண்டி களஞ்சியம்**
10/பி/1, ஹேவஹெட்ட வீதி,
தென்னக்கும்புர
கண்டி
தொலைபேசி: 081-2240274

## அரச ஒசுசல

**ஒசுசல – அம்பாறை**
கோயில் சந்தி,
டி.எஸ்.சேனாநாயக்க
மாவத்தை,
அம்பாறை.
தொலைபேசி: 063-2223088

**ஒசுசல – அனுராதபுரம்**
வங்கித் தெரு,
அனுராதபுரம்.
தொலைபேசி: 025-2222181

**ஒசுசல – அவிசாவளை**
G 33/34/35
மத்திய பஸ் நிலையம்,
அவிசாவளை.
தொலைபேசி: 036-2222501

**புதிய ஒசுசல – பதுளை**
CWE கட்டடம்,
பண்டாரவளை வீதி,
பதுளை.
தொலைபேசி: 055–2229837

**ஒசுசல – பண்டாரகம**
வைத்தியசாலை வளாகம்,
ஹொரண வீதி,
பண்டாரகம.
தொலைபேசி: 038-2288671

**ஒசுசல – பேருவளை**
பநோக சங்க கட்டிடம்
பேருவளை
தொலைபேசி 034-2278578

**ஒசுசல – பொறளை**
லேடி ரிஜ்வே வளாகம்,
பொறளை.
தொலைபேசி: 011-2697660

**ஒசுசல – கொழும்பு** 1
79, சேர் பாறன் ஜயதிலக
மாவத்தை,
கொழும்பு 01.
தொலைபேசி: 2328046

**ஒசுசல – கொழும்பு 4**
85, காலி வீதி,
கொழும்பு 04.
தொலைபேசி: 2587128

**ஒசுசல – கொழும்பு 7**
255, தர்மபால மாவத்தை,
கொழும்பு 07.
தொலைபேசி: 011-2694716,
011-2672293

**ஒசுசல – தியத்தலாவ**
பிரதான வீதி,
தியத்தலாவ.
தொலைபேசி: 055-3551624

**ஒசுசல – எம்பிலிபிடிய**
102, பெல்லேகம,
எம்பிலிபிடிய.
தொலைபேசி: 047-2261177

**ஒசுசல – கோட்டை**
கோட்டை புகையிரத நிலையம்,
கோட்டை.
தொலைபேசி: 011-2336926

**ஒசுசல – காலி**
61ஏ, வக்வெல்ல வீதி, காலி.
தொலைபேசி: 091-2234726

**ஒசுசல – கம்பஹா**
266, கொழும்பு வீதி
கம்பஹா
தொலைபேசி:033-2234516

**ஒசுசல–ஹம்பாந்தோட்டை**
இல.3, பரக்கா வீதி,
ஹம்பாந்தோட்டை.
தொலைபேசி: 047-2222163

**ஒசுசல – ஜயவர்தனபுர**
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது
வைத்தியசாலை,
ஸ்ரீ ஜயவர்தனபுர.
தொலைபேசி: 011-2779414

**ஒசுசல – யாழ்ப்பாணம்**
149ஏ, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2219262

**ஒசுசல – கண்டி**
லங்கம மாவத்தை
கண்டி
தொலைபேசி.081-2225175

**ஒசுசல – கராபிட்டிய**
175, ஹிரிபுர வீதி,
கராபிட்டிய
தொலைபேசி:091 2226947

**ஒசுசல – (கண்டி புகை.நி)**
புகையிரத நிலைய வீதி
கண்டி
தொலைபேசி 081-2225176

**ஒசுசல – குருணாகல்**
28, வீரதுங்க கட்டடம்,
பௌத்தாலோக மாவத்தை,
குருணாகல்.
தொலைபேசி: 037-2230840

**ஒசுசல – மஹரகம**
71/9, அல்விஸ் கட்டிடம்
பழைய வீதி, மஹரகம
தொலைபேசி: 0112-2745640

**ஒசுசல – மாத்தறை**
23பி, சரிக்காராமய,
அனகாரிக தர்மபால
மாவத்தை,
மாத்தறை.
தொலைபேசி: 041-2231871

**ஒசுசல – மினுவங்கொட**
24, பழைய நகர மண்டப கட்.
கொழும்பு வீதி,
மினுவங்கொட.
தொலைபேசி: 011-2295120

**ஒசுசல – நாகொட**
313, மதுகம வீதி,
நாகொட, களுத்துறை
தொலைபேசி: 034-2222818

**ஒசுசல – நீர்கொழும்பு**
134, கொழும்பு வீதி,
நீர்கொழும்பு.
தொலைபேசி: 031 2228599

**ஒசுசல – நிந்தவூர்**
இல.ச0, பிரதான வீதி,
நிந்தவூர்
தொலைபேசி: 067-2058208

**ஒசுசல – நுகேகொட**
145ஏ/1, எஸ்.டி.எஸ். ஜயசிங்க
மாவத்தை, நுகேகொட.
தொலைபேசி: 011-2856641

**ஒசுசல – பாணந்துறை**
159, MPCS கட்டடம்,
காலி வீதி, பாணந்துறை.
தொலைபேசி: 038-2234767

**ஒசுசல – பிலியந்தலை**
1A/21, வித்தியால மாவத்தை
பிலியந்தலை
தொலைபேசி: 0112-2613640

**ஒசுசல – பொலனறுவை**
வைத்தியசாலைச் சந்தி,
கதுறுவெல வீதி,
பொலனறுவை.
தொலைபேசி: 027-2225465

**ஒசுசல – ராகம**
61ஏ, மஹபாகே வீதி,
ராகம.
தொலைபேசி: 011-2955219

**ஒசுசல – இரத்மலானை**
மெகா சதொச,
கொளுமடம சந்தி,
காலி வீதி,
இரத்மரானை.
தொலைபேசி: 011-3043789

**ஒசுசல – இரத்தினபுரி**
32, நந்த எல்லாவல
மாவத்தை,
இரத்தினபுரி.
தொலைபேசி: 045-2223014

**ஒசுசல – தங்கல்ல**
8, இந்திபொக்குனுகொட வீதி,
தங்காலை.
தொலைபேசி: 047-2241221

## சந்தைப்படுத்தல், விற்பனைகள் பிரிவு

75, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி: 011-2430778, 011-2328507, 011-2320356-9